சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 10	மார்ச் - 2023	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 10	MARCH - 2023	Rs. 15/-



காவிரிக்கரையில் ஓர் பரமஹம்சர்
ஸ்ரீ இராமா சாது..!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-10 மார்ச் - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



நீ உனது கண்ணால் காண்கின்ற, அனுபவிக்கின்ற, அனைத்தும் நான் உனக்கு அளித்தது ஆகும். அப்படி இருக்கும் பொழுது உனக்கு ஒரு கஷ்டம் வரும் பொழுது, அதை நான் தீர்த்து வைத்தால், நான் உனக்கு அளித்ததையே எனக்கு திருப்பித் தருவதாக பேரம் அல்லவா பேசுகிறாய்.

ஒன்றை மட்டும் நீ நன்றாகத் தெரிந்து கொள். நீ கொடுக்கும் செல்வத்தைப் பெற்றுக்கொண்டு உன் கஷ்டங்களை போக்குபவன் அல்ல நான்! உண்மையான நம்பிக்கையும், பக்தியும் மட்டும்தான் என்னை அடையும் வழி என்பதை நீ புரிந்து கொள்.

எந்த வியாபாரமும் என்னிடம் பேசா மல் அன்போடு நீ எதைக் கொடுத்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்வேன். எந்த தாயும் தன் குழந்தைகளிடம் இருந்து எதையும் எதிர்பார்க்க மாட்டாள் என்பதனை நீ உணர மாட்டாயா?

உன் தேவைகள் என்ன என்று எனக்கு தெரியாதா? தெரியாது என்பதைப் போல் அல்லவா என்னிடம் ஓயாது பிரார்த் திக்கின்றாய். நீ எதையும் என்னிடம் கேட்டால்தான் தருவேன் என்று நினைக்காதே! உனக்கு எதை எப்பொழுது தர வேண்டுமோ அதை அப்பொழுது கண்டிப்பாக தருவேன்.

அதுவரை நம்பிக்கையோடு, பொறுமை யாகக் காத்திரு! நல்லதே நடக்கும்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து ஆறாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.



வழக்கம்போல் காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் ஆரம்பித்த விழா, தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு சிறப்பு விருந்தினர்கள் வருகை தரவும் புத்தக வெளியீட்டு விழா தொடங்கியது

காஞ்சிபுரம் மேல்சிறுணை கிராமத்தில் தமிழகத்தில் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபருக்கு என கட்டப்பட்ட முதல் ஆலயத்தின் ஸ்தாபகரும், ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ பாத வல்லப திருக்கோவிலின் ஆதீனகர்த்தா



ஸ்ரீ வல்லபானந்த மயி அம்மா அவர்கள் இம்மாத இதழை வெளியிட, சென்ற மாத இதழில் சித்தர்கள் சீவ சமாதி தரிசனத்தில் இடம் பெற்றிருந்த எலப்பாக்கம் சித்தர் ஸ்ரீ இராமச்சந்திர குருசாமி அவர்களின் கொள்ளுப் பேரன் திரு. பார்த்திப குருசாமி தாசன் அவர்கள் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்.

விழாவில் திரு. சுந்தர்சாய், திரு. வெங்கடேசன், திரு.அகஸ்டின், திரு. உமா சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புத்தக வெளியீட்டிற்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும், சாய் தியானாலயா பிரார்த்தனை மையம்





சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும் நமது இதழுக்கு திருச்சி தனபாலன் அவர்கள் ஐந்து, ஒரு வருட சந்தாதாரர்களையும், மதுரை திரு. மெய்கீர்த்தி அவர்கள் இரண்டு, மூன்று வருட சந்தாதாரர்களையும் இணைத்து சாயி சேவையில் இணைந்து துள்ளார்கள் அவர்களும் அவர்களது குடும்பத்தார் அனைவரும் நீள் ஆயுள், நிறை செல்வம், வான புகழ், மெய் ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக் கின்றோம்.

எந்த விளைவுகளுக்கும் ஒரு பின் விளைவு உண்டு என்பதற்கிணங்க, நாம் இயற்கைக்கு செய்த தீய விளைவுகளுக்கேற்ப, இயற்கை நமக்கு செய்த பெரும் தீமையாக, துருக்கி, சிரியாவின் பேரழிவுகள் நம் நெஞ்சை நொறுக்கிப் போட்டிருக்கின்றது.

இயற்கையின் கோரத்தாண்டவத்தில் சிக்கி இன்னுயிரை இழந்த பல்லாயிரக் கணக்கான நம் சொந்தங்க ளுக்காக வும், அவர்கள் விட்டுச்சென்ற அவர் களின் மிச்ச உறவுகளுக்காகவும் பகவான் சாயிநாதரிடம் மனமுருக பிரார்த்திப்போம்.

மி க வி ரை வி ல் இ ப் பெ ரு ம் அழிவுகளில் இருந்து அந்நாடுகள் மீண்டெழுந்து அன்பும் அமைதியும், சகோதரத்துவமும் மதநல்லிணக்கமும் பெருகி வாழ்க வளமுடன் என மனதார வாழ்த்துவோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கி யத்துடனும்,நிம்மதியுடனும் வாழ வேண்டும் என பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!
வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்

திருமதி.சீத்தா தேவி தார்கெட்



திரு.ராமசந்திர ஆத்மாராம் தார்கெட்டின் மனைவி திருமதி. சீத்தா தேவி தார்கெட். திரு.தார்கெட், கடாவ் நூற்பு ஆலையில் நிர்வாக மேலாளராக ரூபாய் 4,000 மாதச் சம்பளத்தில் (பதினெட்டாம் நூற்றாண்டில் மிக அதிக சம்பளம் இது) பணிபுரிந்து வந்தார்.

திரு.தார்கெட் பிரார்த்தனை சமாஜத்தை சேர்ந்தவர்.பிரார்த்தனா சமாஜம் உருவ வழிபாட்டை எதிர்த்து வந்தது. தார்கெட் ஞானிகளையும், துறவிகளையும் வெறுத்து ஒதுக்கினார்.

திருமதி. தார்கெட் ஒற்றைத் தலைவலியால் பல ஆண்டுகாலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். ஆங்கில யுனானி மற்றும் ஆயுர்வேத சிகிச்சைகளை மேற்கொண்டும் பயன் எதுவும் இல்லை. வலியால் அடிக்கடி துடித்தாள்.

மும்பையின் புறநகர் பகுதியில் பாந்த்ராவில் வசித்து வந்த பீர் மெளலானா என்ற பக்கீரை சந்திக்குமாறு அவளது நண்பர்களும், உறவினர்களும் வற்புறுத்தினர். ஆனால் ஒரு முஸ்லீமை அதுவும் ஒரு பெண் சந்திப்பதா என கேள்வி எழுந்தது.

அனைத்தையும் புறக்கணித்துவிட்டு தன் மகன் ஜோதிந்திர தார்கெட்டுடன் அவள் அவரை சந்தித்தாள். அவர் அவளை சீரடிக்கும் சென்று பாபாவை தரிசிக்குமாறு கூறினார். தாயும் மகனும் அவர் அறிவுரைப்படி சீரடி சென்றனர்.

சீரடியில் பாபா அவர்களை வரவேற்றார். அவள் அவரது கமலப் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள். பாபா தனது கைகள் நிறைய உதியை எடுத்து அவள் தலையில் பலமாக ஓங்கித் தட்டினார். அதே சமயம் அவளை நோக்கி " இனி உன் வாழ்நாளில் ஒற்றை தலைவலியே வராதென்றார்." அந்த நிமிடம் முதல் அவள் பாபாவின் தீவிர பக்தரானாள்.

சில மாதங்கள் சென்ற பின் அவள் தன் கணவர் ராமச்சந்திர ஆத்மாராம் தார்கெட்டை கூட்டி வந்தாள். அவரும் பாபாவின் தீவிர பக்தரானார். இவர்கள் இருவரைப் பற்றிய குறிப்புகள் பாபா இவர்கள் பால் நிகழ்த்திய லீலைகள் ஆகியவற்றை ஸ்ரீ சாய் சத் சரிதா என்ற புத்தகத்தில் அடிக்கடி பார்க்கலாம்.

பாபா கூறியபடி அவள் வாழ்நாளில் ஒற்றை தலைவலி திரும்ப வரவேயில்லை.

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

லீலை: 15, பாபா அருளிய விநோதமான குழந்தை வரம்



– ஜெயந்தி ஸ்ரீராம்

*எ*னது மிக நெருங்கிய தோழி ஒருவரின் மகளுக்கு திருமணமாகி ஐந்தாண்டுகளாக குழந்தை இல்லை. எல்லா வைத்திய முறைகளையும் முயற்சி செய்து பார்த்தாயிற்று. சுற்றி இருப்பவர்கள் கூறிய எல்லா கோவில்களுக்கும் சென்று பரிகாரங்கள் செய்தாயிற்று. பலன் ஒன்றும் இல்லை.

இறுதியில், பாபாவிடம் பிரார்த்தனை வைப்பதற்காக "சாய் தியானாலயா பிரார்த்தனை மையத் திற்கு" வருகிறார்கள். எப்போதும்போல் குரு அவர்களுக்கு ஆறுதல்கூறி, நிச்சயம் பாபா உங்களுக்கு நன்மையைச் செய்வார் என்று நம்பிக்கையளித்து அனுப்பி வைக்கின்றார்.

குழந்தை செல்வம் வேண்டி அந்த தம்பதியினர் நிறைய வைத்தியமும், பிரார்த்தனைகளும் செய்து விட்டதனால் அவர்கள் நம்பிக்கையற்று இருந்தனர். அதனால், சரியாக ஒரு மாதத்தில் திரும்ப வந்து, குருவிடம் என்ன சுவாமி, பாபா இன்னும் எங்களுக்கு குழந்தை வரம் கொடுக்க வில்லையே என்று குறைபட்டுக் கொண்டனர்.

குரு அவர்களிடம் சத்சரிதத்தில் வரும் "ஞானம் கேட்டு வந்த ஹாஜி" கதையைக்கூறி, நீங்கள் கேட்பது கடைச்சரக்கல்ல, நீங்கள் கேட்டதும் காசு வாங்கிக் கொண்டு எடுத்துக் கொடுப்பதற்கு, நம்பிக்கையோடு, பொறுமையும் மிக அவசியம். ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். இறைவனிடம் நாம் கேட்டுப் பெறுவதற்கு எதுவுமே யில்லை. ஏனெனில் அவன் ஏற்கனவே அனைத்தையும் நமக்கு கொடுத்து விட்டான்.

உதாரணமாக, ஒரு மரத்தின் விதையையும், உங்களையும் அவனே படைக்கின்றான். விதை மண்ணில் விழுந்ததும் முளைக்கின்றது. ஏன் தெரியுமா? விதைக்குள் விருட்சத் திற்குண்டான அனைத்து மூலத்தையும் இறைவன் ஏற்கனவே அதற்குள்ளாகவே பதித்து விட்டான். எனவே அவைகள் தன்னாலேயே முளைத்து

தளைக்கின்றன.

மனிதனும் அப்படித்தான் மனிதனுக்குள்ளாகவே இனப்பெருக்கத்தின் அத்துணை கூறுகளும் பதியப்பட்டிருக்கின்றன. மனிதன் இயற்கையை மீறிய காரியங்களைச் செய்து தன்னைத் தானே கெடுத்துக் கொள்கிறான். பிறகு எனக்கு அது இல்லை, இது இல்லை என்று படைத்தவனிடம் முறையிட்டால் எப்படி.

தூங்கும்போது விழிக்கின்றீர்கள். விழித்திருக்கும்போது தூங்குகிறீர்கள். இறைவன் கொடுத்த உடலை இயற்கைக்கு விரோதமாக பயன்படுத்துகின்றீர்கள். உடலை யும், மனதினையும், முறையாகப் பயன்படுத்தி வாழ்பவர்களுக்கு இந்த பூமியே சொர்க்கம், இல்லை என்றால் இதுவே நரகம்.

அதையும் மீறி இறைவனிடம் கேட்டு அவன் தந்தால், நாம் கேட்டால்தான் இறைவன் தருவான் என்றல்லவா பொருள் ஆகிறது. கேட்டால்தான் இறைவன் தருவான் என்று வைத்துக் கொண்டாலும், எந்த ஒன்றையும் கொடுப்பதற்கு முன்பு அதற்கு நம்மை தகுதியானவனாக மாற்ற வேண்டியது அவனது கடமை அல்லவா? அதற்காகவே சோதனைகளை கொடுக் கின்றான் என்று ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது?

அப்படி இல்லாது, நாம் என்ன பாவம் செய்தோம் இறைவன் ஏன் நம்மை இவ்வாறு சோதிக்கின்றான் என்று துன்பப்படுவானேன்? "சோதனைகளே சாதனைகளாகின்றன" என்பதனை அறிந்து கொண்டு, அதன்படி ஏன் உங்களால் பொறுமை யாக இருக்க முடியவில்லை.


பாபா கொடுக்கும் வரை கொஞ்சம்



பொறுமையை கடைபிடியுங்கள். ஏன் என்றால் உங்களது ஜாதகத்தின்படி உங்களுக்கு குழந்தைச் செல்வம் கிடையாது. கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான பாபா நினைத்தால்தான் உங்களுக்கு குழந்தைச் செல்வம் கிடைக்கும். அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பாபாவை சரணடையுங்கள்.

உங்களுக்கு இதை விட்டால் வேறு வழி இல்லை. பாபாவை நம்புங்கள் அவர் நினைத்தால் எதுவும் நடக்கும். ஏற்கனவே விதிக்கப்பட்டதை மாற்ற அவர் ஒருவரால்தான் முடியும். பாபாவிடம் உங்கள் பாரத்தை இறக்கி வைத்துவிடுங்கள். நீங்கள் நினைத்தது நடக்க வேண்டுமானால் இறக்கி வைத்த பாரத்தை மீண்டும் மனதில் ஏற்றிக்கொள்ளாதீர்கள்.

பாபாவிடம் என் கோரிக்கையை சமர்ப்பித்துவிட்டேன். பாபா எனக் குண்டானதை நிச்சயம் வழங்குவார் என்று மனதை திடப்படுத்திக்கொண்டு, சதா சர்வ காலமும் சாயிநாதரையே மனதில் இருத்துங்கள். மிகவிரைவில்



நீங்கள் கேட்டதை பகவான் சாயி உங்களுக்கு வழங்குவார்.

மிக முக்கியமாக உங்களுக்கு எது தேவையோ அந்த கோரிக்கையை பாபாவிடம் தெரிவித்த பிறகு மீண்டும் அந்த கோரிக்கையை மறந்துகூட நினைத்து புலம்பாதீர்கள். " எது நடக்க வேண்டும் என்று நினைக்கின்றீர்களோ அதை பாபாவிடம் விண்ணப்பித்து விட்டு அப்போதே மறந்து விடுங்கள்" அந்தக் கோரிக்கை உடனே நடந்து விடும்.

அப்படியும் நடக்கவில்லை என்றால் குறை உங்களிடம் தான் இருக்கும். பாபாவிடம் எப்படி இருக்கும். இந்த வழியை நீங்கள் எவ்வளவு உறுதியாகப் பின்பற்றுகிறீர்களோ அவ்வளவு விரை வாக உங்கள் கோரிக்கை பாபாவால் நிறைவேற்றப்படும் என்று கூறி அவர் களை அனுப்பி வைத்தார்.

அதன்பிறகு மூன்று மாதங்கள் ஆயிற்று, அந்த தம்பதி யினர் நமது மையத்திற்கு வரவில்லை. குருவும் இரண்டு மூன்று முறை அவர்களைப் பற்றி விசாரித்தார்கள். பிறகு கேட் பதை நிறுத்திக் கொண்டார்கள். ஆயினும் வியாழன் தோறும் அவர் களுக்கு உண்டான பிரார்த் தனை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

ஒரு வியாழக்கிழமை மையத்தில் மாலை ஆரத்தி தொடங்குவதற்கு முன்னால் குருவை சந்திக்க வேண்டும் என்று ஒரு பெண்ணும் அவளது கணவரும் வந்து குருவிடம், அய்யா நாங்கள் தீவிரமான பாபா பக்தர்கள். பொருளாதாரத்தில் மிகவும் சிரமப்பட்டுகிறோம். எங்களுக்கு ஏற்கனவே மூன்று பெண் குழந்தைகள் இருக்கின்றார்கள். இதற்கு மேல் குழந்தைகள் வேண்டாம் என்று என் மனைவி குடும்ப கட்டுப்பாடு செய்து கொண்டாள்.

ஆனாலும் எப்படியோ என் மனைவி மீண்டும் கர்பமாகிவிட்டாள். தற்போது மூன்று மாதமாகிறது. மருத்துவரிடம் விளக்கம் கேட்டால். ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது. இந்தக் குழந்தையையும் பெற்றுக் கொள்ளுங்கள். பிறகு மீண்டும் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை செய்து கொள்ளலாம் என்று கூறுகிறார்கள்.

எங்களுக்கு அவர்களின் மீது நம்பிக்கை இல்லை.நாங்கள் இருக்கும் சூழ்நிலையில் நான்காவதாக ஒரு குழந்தையை பெற்று வளர்க்கக் கூடிய நிலை எங்களுக்கு இல்லை. நாங்கள் இப்போது என்ன செய்வது அய்யா. அபார்ஷன் செய்து

கொள்வதையும் நாங்கள் பெரும் பாவமாக நினைக்கிறோம். தனியார் மருத்துவமனையில் சென்று அபார்ஷன் செய்து கொள்ளலாமா?

எங்களுக்கு இப்போது என்ன செய்வதென்றே புரியவில்லை. பாபா எங்களை இந்த இக்கட்டான சூழ்நிலையில் தவிக்க விடுகிறார். என்று கண்ணீர் விட்டு குருவிடம் புலம்பினார்கள். குருவோ, உடனடியாக அவர்களிடம், வேண்டாம் அதை மட்டும் செய்து விடாதீர்கள். நீங்கள் சற்று அமைதியாக இங்கு உட்காருங்கள். இங்கு இப்போது சத்சங்கம் நடக்கும்.

முடிந்ததும் பாபாவிற்கு ஆரத்தி காட்டப்படும். ஆரத்தி முடிந்ததும் நாம் பேசிக்கொள்ளலாம். என்று அவர்களை சற்று ஆசுவாசப்படுத்தி அமர வைத் தார்கள். சத்சங்கம் ஆரம்பித்தது. சத்சங் கத்தில் குரு அவர்கள் நீங்கள் எப்போது பாபாவை மனப்பூர்வமாக நம்பி இங்கே வந்தீர்களோ, அப்போதே உங்களது கோரிக்கையை பாபா அறிவார்.

உங்களது கோரிக்கைகள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். நீங்கள் இங்கே தயவு செய்து உங்கள் அலைபாயும் மனதை சற்று கட்டுப்படுத்திக்கொண்டு, இங்கு நடக் கும் நிகழ்வுகளில் கவனம் வையுங்கள்.

நீங்கள் வெறுமனே சும்மா உட்கார்ந் திருங்கள். உங்களுக்குள் பாபா என்ன மாற்றம் செய்யவேண்டு மோ அதை மிகச்சரியாக செய்வார். ஏனெனில் நமக்கு எதை தர வேண்டும் என்பதை அறிந்தவர் அவர் மட்டுமே, என்பதை அறிந்து கொள்ளுங்கள். என்று கூறிவிட்டு பாபாவின் தியானத்தை ஆரம்பித்தார்.

சரியாக தியானம் ஆரம்பம் ஆவதற்கு ஒரு விநாடிக்கு முன்பாக மூன்று மாதமாக மையத்திற்கு வராத, குழந்தையில்லாத தம்பதியினர் உள்ளே வந்து குருவிற்கு வணக்கம் செலுத்தினார்கள். குருவும் தியானம் ஆரம்பிக்க இருக்கிறது. முதலில் தியானத்தில் கலந்து கொள்ளுங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம் என்று அவர்களை தியானத்தில் அமர வைத்தார்.

பத்து நிமிடங்கள் தியானம் முடிந்த உடன் ஆரத்தி ஆரம்பமானது. ஆரத்தி முடிந்தவுடன் மூன்று மாதம் கர்பிணியான பெண் தன் வயிற்றை கைகளால் பிடித்தபடி வலியால் துடித்தாள். அருகில் உள்ளவர் அவரை விசாரித்து உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்க, அடுத்த பத்து நிமிடத்தில் அந்த பெண்ணுக்கு சிகிச்சை அளிக்காமலே தானாகவே அபார்ஷன் ஆயிற்று என்ற செய்தி வந்தது.

மையத்தில் இருந்தவர்களிடம் இந்தக் கதையை குரு அவர்கள் பாபாவின் மகிமையை பார்த்தீர்களா? ஒரு மணி நேரத்திற்கு முன்புதான், எங்களுக்கு இந்தக் குழந்தை வேண்டாம் ஆனால் அபார்ஷன் செய்ய மனமில்லை என்று பாபாவிடம் வேண்டினார்கள். மருத்துவ சிகிச்சையின்றி இயற்கையாகவே, அந்தக் குழந்தை வெளியேறிவிட்டது.

பாபா அந்தக் குழந்தையை யாருக்குக் கொடுக்கப் போகின்றாரோ அவருக்குத்தான் தெரியும். என்று கூறி முடிக்கவும். குழந்தையில்லா அந்தப் பெண் மயங்கி விழவும் மிகச்சரியாக இருந்தது.

உடனடியாக அவரையும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கூட்டி



சென்று சிகிச்சையளிக்க, அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் கர்ப்பமாக இருப்பதாக செய்தியை கூறவும், மிகவும் ஆனந்தப்பட்ட அந்த தம்பதியினர் மீண்டும் நம் மையத்திற்கு வந்து அனைத்து பாபா பக்தர்களுக்கும் இனிப்பு வழங்கி மகிழ்ந்து பாபாவிற்கு நன்றி செலுத்தினார்கள். அதுமட்டுமின்றி அந்த வாரம் நடக்கும் அன்னதானத்திற் குண்டான செலவையும் அவர்களே ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வு எதார்த்தமாக கூட நிகழ்ந்திருக்கலாம். நமது மையத்திற்கு வராமல் இருந்திருந்தால் கூட இது நடந்திருக்க வாய்பு உண்டு. அன்றைய நிகழ்விற்கு ஒரு தம்பதி மட்டும்கூட வந்திருக்கலாம். ஆனால் இரண்டு தம்பதிகளும் ஒருவர் பின் ஒருவராக வரவைத்து, அதிலும் மூன்று மாதமாக வராத தம்பதியினரையும் குறிப்பாக அன்றைய தினம் வரவழைத்து நமது மையத்தில் சாயி நாதர் நடத்திய லீலா வினோதத்தை என்னவென்பது.

ஒரு முத்து கடலில் விளைந்திருக் கலாம். இன்னுமொரு முத்து இயற்கையாக நிலத்தில் வளர்க்கப்பட் டிருக்கலாம். ஆனால் மெருகேற்றப் பட்ட முத்துக்கள் பாபா என்ற நூலில் கோர்க்கப்பட்டதுதான் "சாயி லீலை" என்று எங்களது குரு அடிக்கடி கூறுவார். நானும் இதையே கூறி அடுத்த மாதம் "பாபா வரம் கொடுத்தும் பெற்றுக் கொள்ளாத நபர்களின்" கதைகளை கூறுகிறேன்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

தொடர் –56

குருவைத் தேடி

பிச்சைக்காரர் என்னை நோக்கி தூக்கி எறிந்த பையை எடுத்து பிரித்துப் பார்க்க, அதில் கட்டுக்கட்டாக பணம் மட்டுமே இருந்தது. பாபாவின் புகைப் படங்களை காணோம்.

இதென்ன அதிசயமாக இருக் கின்றதே! என்று நிமிர்ந்து பார்த்தால் பிச்சைக்காரரையும் காணோம். நான் பையை கையில் எடுத்துக் கொண்டு சாலையைப் பார்க்கின்றேன். அது அண்ணாநகர் பிரதான சாலை. இரவு இரண்டு மணி. எனக்கு முன்பாக ஓடிய நூற்றுக்கணக்கான எருமை மாடுகள், இரண்டு திருடர்கள், பிச்சைக் காரர் ஒருவரையும் காணோம். ஆனால் அதற்குப் பதில் இரண்டு போலீஸ்காரர்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

நான் பையை எடுத்துக் கொண்டு வண்டியில் ஏறுவதற்குள் போலீஸ் காரர்கள் என்னருகே வந்து விட்டார் கள். வந்தவர் உடனடியாக என்னையும், என் பணப் பையையும் பார்த்துவிட்டு, யார்யா நீ, எங்கிருந்து வருகிறாய். இரண்டு மணிக்கு இங்கென்ன வேலை, பையில் என்ன என்று அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டுக் கொண்டே என் கைகளில் இருந்த பையை பிடிங்கிக்கொண்டார்.

எனக்கு பதட்டமாகிப் போனது. இறைவா, ஏன் என்னை இப்படி சோதிக் கின்றாய். வட்டிக்கு வாங்கிக்கொண்டு வந்த பணம் திருடர்கள் வசம் போனது, அவர்களிடம் இருந்து பிச்சைகாரரிடம்



போனது, அப்போதெல்லாம் எப்ப டியே தப்பித்த பணம் இப்போது போலீஸ்காரரிடம் போய் விட்டது. இனி எனக்கு வரும் என்ற நம்பிக்கை இல்லை. என்றவாறே நொந்து கொண்டு நின்றேன்.

என் கைகளில் இருந்து பையை பிடுங் கிய போலீஸ்காரர். பையை பிரித்து உள்ளே கையை விட்டு கைக்கு சிக்கிய கட்டுகளை வெளியில் எடுக்கின்றார். கட்டுக்களைப் பார்த்ததும் அவரது முகம் மாறிவிட்டது.

என்னையா இது. "இவ்வளவு பாபா

படம் எங்கே கொண்டு போறே" என்றார். எனக்கு மீண்டும் குழப்பம். இப்போது தானே நான் பணத்தைப் பார்த்தேன். இப்போது எப்படி பாபா படமாக மாறியது. என்று வியந்தேன். சொல்லுய்யா, இவ்வளவு பாபா படத்தை எங்கே கொண்டு போறே!

நான் சற்றே சுதாரித்துக் கொண்டு, எனது கடையின் விலாசத்தைக் கூறி, கடைவிளம்பரத்தை இதில் அச்சிட்டு கோவிலுக்கு கொடுப்பதற்காக வாங்கிச் செல்கிறேன் என்றேன்.

அந்த போலீஸ்காரர், அதற்கு ஏன் இங்க நிக்கறீங்க என்றார். இல்லை அய்யா வண்டியில் இருந்து பை கீழே விழுந்து விட்டது. அதுதான் இறங்கி எடுத்துக் கொண்டு இருந்தேன் என்றேன். சரி, சரி, புறப்படுங்கள் என்று என்னை அனுப்பிவிட்டார்.

நான் அவரிடம் இருந்து பையை வாங்கிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் வண்டியில் ஏறி கடைக்குச் சென்றேன். செல்லும்போதே எப்படி பணக்கட்டுகள் திரும்ப பாபா படமாக மாறிவிட்டது! நான் பணத்திற்கு என்ன பதில் சொல்லுவேன் என்றபடி ஒரு விளக்கிற்கு கீழ் வண்டியை நிறுத்தி மீண்டும் பையை திறந்து பார்க்க அதில் பணம் கட்டுகள் மட்டுமே இருந்தது.

என்னால் என் கண்களையே நம்ப முடியவில்லை.பாபா நான் உன்னை பல நேரங்களில் உதாசீனப்படுத்தி இருக்கலாம். அதற்காக என்னிடம் இப்படி எல்லாம் விளையாடலாமா? எனக்கு நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால் இது கனவா, நனவா, என்றே தெரியவில்லையே! என்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்றே எனக்குத் தெரியவில்லையே, மண்டை வெடித்துவிடுவது போல இருக்கிறது இந்தப் பிரச்சனைக்கெல்லாம் ஒரு நல்ல வழியைக் காட்டுங்கள் பாபா என்று முதல்முறையாக மனதிற்குள் பாபாவிடம் பிரார்த்திக்கிறேன்.

ஒரு வழியாக பணப்பையை மீண்டும் ஒரு முறை திறந்து பார்த்து, பணம் இருப்பதை உறுதிபடுத்திக்கொண்டு பையை பத்திரமாக வண்டி லாக்கரில் வைத்து வட்டு காலையில் 3 மணிக்கு கடைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

கடைக்குச் சென்றதில் இருந்து என்னால் சிறிது நேரம்கூட வியாபாரம் பார்க்க முடியவில்லை. எங்கு திரும்பினாலும் பாபா, பாபா, பாபா மட்டும்தான் தெரிகின்றார். என்னால் அந்த முகத்தை மறக்க முடியவில்லை. நீண்ட நாட்களாக எனக்குள் கனன்று கொண்டிருந்த நெருப்பு வெடித்தது போல் இருந்தது. பாபாவைத் தவிர வேறெதையும் என்னால் சிந்திக்க முடியவில்லை. நான் மெல்ல, மெல்ல பாபாவின் பக்தனாகவில்லை. ஒரே நாளில் பக்தனானவன்.

என் நிலை அப்படித்தான் இருந்தது. பாபாவின் படத்தை நான் ஏற்கனவே பல முறை பார்த்திருந்தாலும், பணக்கட்டுக்குப் பதில் ஆயிரக் கணக்கில் இருந்த பாபாவின் புகைப்படத்தை நான் அப்போதுதான் புதிதாகப் பார்க்கின்றேன். பாபாவின் முகம் மட்டும் உள்ள புகைப்படம்.அந்த முகம் என்னை என்னவோ செய்தது.

விழித்திருக்கும்போதும் அதே முகம், கண்ணை மூடினாலும் அதே முகம், சாப்பிடும்போது உணவெல்லாம் அதே முகம். என்னால் பாபாவை தவிர்த்து வேறு எந்த ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. இதுதான் தெய்வீகக் காதல் என்பதா? "காதலாகி கண்ணீர் மல்கி கசிந்துருகி" என்பார்களே அதுபோலானேன்.

எப்போதும் போல் ஒரு நாள்,

இரண்டு நாள் இந்த ஆன்மீக போதை இருக்கும் அப்புறம் தெளிந்துவிடும் என்று தான் நினைத்தேன். ஆனால் தொடர்ந்து ஒரு வாரமாகவே இதே நிலை. பித்து பிடித்ததுபோல் ஆனேன். என்ன செய்தால் இந்த பித்து போகும் என்று யோசிக்க ஆரம்பித்தேன். வியாபாரத்திற்கு என்று வாங்கிவந்த இரண்டு லட்சம் பணத்தை என்ன செய்தேன்.

பகீரென்றது என் மனம் ஒருவாரத் திற்கு பின்புதான் தின வட்டிக்கு வாங்கிய பணத்தின் நினைப்பே எனக்கு வந்தது. ஆகா பணத்தை எங்கே வைத்தேன். வெகு நேரத்திற்குப் பின்புதான் வண்டி லாக்கரில் வைத்ததே என் ஞாபகத்திற்கு வந்தது. சட்டென்று ஓடி வண்டியை திறந்து பார்த்தேன். பணம் பை பத்திரமாக இருந்தது.

கடை மேலாளரிடம் கடையைப் பாரத்துக் கொள்ளுங்கள் ஒரு வேலை யாக வெளியில் சென்று வருகிறேன் என்று கூறிவிட்டு வண்டியை எடுத் தேன். பின்னாலேயே வந்த மேலாளர். சார் கேக்கறேன்னு கோவிச்சுக்காதீங்க, கடையிலே சரக்கும் இல்லே. கடன்காரங்க வேற நெருக்கறாங்க, நீங்க வேற ஏதோ மனக்கலக்கத்திலே இருக்கீங்க, பேங்க் மேனேஜர் வேற வரச்சொன்னார். லோன் ரெடியா யிருச்சாம். நான் வேணா போயி என் னன்னு கேட்டுட்டு வரவா என்றார்.

நான் அவரை கையமர்த்தி, அதெல்லாம் வேணாம், பேங்கல மட்டும் தான் நம்ம கடன் வாங்கலே, எல்லாம் அடுத்த வாரம் பாத்துக்கலாம். என்று கூறிவிட்டு புறப்பட்டு நேராக சேட்டிடம் சென்று இரண்டு லட்ச ரூபாயை அவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு வண்டியை எடுத்துக் கொண்டு ஈஞ்சம்பாக்கம் பாபா ஆலயத்தில்



சென்று உட்கார்ந்து விட்டேன்.

வெகுநேரம் கழித்து எழுந்து கொண்டு பாபாவை தரிசித்து வெளியே வருகிறேன். அங்கு ஒருவர் ஒரு பெட்டியில் நிறைய சீட்டுகளை சுருட்டி போட்டு, அதில் ஒன்றை எடுத்து படியுங்கள். பாபா உங்களுக்கு ஒரு நற்செய்தி கூறுவார் என்றார். "எத்தை தின்றால் பித்தம் தெளியும்" என்ற நிலையில் இருந்த நான் அதில் ஒரு சீட்டை எடுத்து பிரித்துப் படித்தேன்.

அதில், "உன்னுடையது என்று எதை எல்லாம் நினைக்கிறாயோ, அதை எல்லாம் துறந்துவிடு, நான் உன்னை நிறைக்கிறேன்" என்று எழுதியிருந்தது. அன்றிரவு முழுக்க எனக்கு தூக்கமே வரவில்லை. புரண்டு, புரண்டு படுக்கிறேன். என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை எல்லாம் மீண்டும், மீண்டும் நினைத்துப் பார்த்து அதிகாலை மூன்று மணிக்கு என் மனதிற்குள் தீர்க்கமாக முடிவொன்றை எடுத்தேன்.

எடுத்த முடிவை மனைவியிடம்

கூறலாம் என்று மனைவியைப் பார்த்தால், அவள் எனக்கு முன்பாக எழுந்து பாபாவின் படத்திற்கு முன் கைகூப்பிக் கொண்டு நிற்கின்றாள். நான் எழுந்து போய் பார்க்கின்றேன். கண்களில் இருந்து நீர் வழிய என்னைப் பார்த்து விம்முகிறாள். நான் அவளுக்கு ஆறுதல் சொல்லும் விதமாக, என்னாயிற்று என்று கேட்க,

நாம் இங்கிருந்து பிழைத்தது போதும் வாருங்கள் நாம் ஊருக்கே சென்று விடலாம் என்றாள். ஏன் இப்போ என்னாயிற்று என்றேன். நீங்கள் இரவில் தூங்கி பல வருடங்கள் ஆகிவிட்டது. பணம் சேர்க்க வேண்டும் என்று மாடாய் உழைக்கின்றீர்கள். நீங்கள் செய்த தவத்தை எல்லாம் கேவலம் பணம் சேர்ப்பதற்கு செலவிட்டு விட்டீர்கள்.

உங்களிடம் இருந்து நான் ஒரு போதும் பணத்தை எதிர்பார்க்கவில்லை. தவத்தைத்தான் எதிர் பார்க்கிறேன். தவம் செய்யும்போது என்னிடம் நிறைய பேசுவீர்கள். என்றைக்கு பணம் செய்ய ஆரம்பித் தீர்களோ, அன்றிலிருந்து என்னிடம் பேசுவதை கூட நிறுத்தி விட்டீர்கள். கடந்த எட்டு வருடங்களாக இப்படியே வாழ்க்கை ஓடிப்போனது.

இப்போது உங்கள் அலுவலகத்தில் ஏதோ பிரச்சனை என்பது மட்டும் எனக்குப் புரிகிறது. அதனால் நிம்மதியிழந்து தவிக்கின்றீர்கள். கடந்த எட்டு ஆண்டுகளாக, நீங்கள் மட்டுமாவது சீரடிக்குச் சென்று பாபாவை தரிசித்து வாருங்கள் என்று எத்தனை முறை கூறியிருப்பேன். ஒரு முறையாவது அதற்கு செவி சாய்த்திருப்பீர்களா?

நன்றாக நினைத்துப் பாருங்கள்.

ஊரில் இருந்து சென்னைக்கு வரமாட்டேன் என்றவளை,சென்னைக்கு வந்தால் உன்னை சீரடிக்குக் கூட்டிப் போகிறேன் என்று கூறித்தானே அழைத்து வந்தீர்கள். அதை இதுவரை நிறைவேற்றினீர்களா? இங்கு வந்ததும் பணம் சம்பாதிப்பதையே லட்சியமாகக் கொண்டு பாபாவை மறந்து விட்டீர்களே!

சரி என்றாவது பழையபடி நாம், தியானம்,ஆன்மீகம் என்று நிம்மதியாக வாழலாம் என்றால், கடந்து மூன்று மாதமாக பித்து பிடித்ததைப் போல் இருக்கின்றீர்கள். வருகிறீர்கள், போகிறீர்கள். என்ன நடக்கிறது என்று என்னிடம் எதுவும் கூறுவது கிடையாது. தயவு செய்து எல்லாவறையும் விட்டுவிட்டு வாருங்கள் நாம் ஊருக்குச் சென்றுவிடலாம். என்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

அந்த நிமிடம், என் மனைவியின் கண்ணீர், "நான் வந்த வேலை எது வென்றும், என் சொந்த வேலை எது வென்றும்" எனக்கு புரிய வைத்தது. ஒவ்வொரு மனிதனும் தன் மனைவி குழந்தைகளுக்கு மன நிம்மதியை தரவேண்டும் என்பதற்காகத்தான் ஒரு லட்சியத்தை நோக்கி கடுமையாக உழைக்கின்றான்.

ஆனால் அவன் அடைய நினைக்கும் "லட்சியம்" மனைவி, குழந்தைகளுக்கு நிம்மதியை தருமா என்பதை அப்போது அவன் நினைக்க தவறுகிறான். ஆகவேதான் கோடிக்கணக்கில் பணம், புகழ் என்று சம்பாதித்தவனும் தன் "லட்சியத்தை" அடைந்தவுடன் தன் நிம்மதியை தொலைக்கின்றான்.

நான் உடனே என் மனைவியிடம் சரணாகதியடைந்தேன். சரி இனி நீ கூறியபடியே செய்கிறேன். இப்போது நான் சொல்வதை நீ கேட்பாயா? என்றேன். கூறுங்கள் என்றாள்.நான்

ஏற்கனவே முடிவு செய்திருந்ததை என் மனைவியிடம் கூறாமல், நான் இதுவரை உனக்கு என்று வாங்கித்தந்த தங்க நகைகள், நிலங்கள், பொருட்கள் என அனைத்தையும் என்னிடம் தருவாயா என்றேன்.

அடுத்த நிமிடம் ஏன் எதற்கு என்று என்னிடம் ஒரு வார்த்தை கூட கேட்காமல், தன் கழுத்தில், காதில் அணிந்திருந்ததையும் சேர்த்து நாங்கள் அதுவரை சேர்த்த அனைத்து செல்வங்களையும் என்னிடம் கொடுத்துவிட்டாள். நான் அவ்வளவையும் இரண்டே நாட்களில் பணமாக மாற்றி, கடை மேளாலரிடம் கொடுத்து கடன்களை பைசல்பண்ணக் கூறினேன்.

ஆனால் அவரோ, அப்படி பண்ண வேண்டாம் கடன்காரர்களுக்கு கொஞ்சம் கொஞ்சம் கொடுத்துவிட்டு கடையை நடத்தலாம் என்று கூறினார். இல்லை முதலில் நான் சொல்வதை செய்யுங்கள். வியாபாரத்திற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்று கூற அவரும் அதன்படியே செய்தார்.

அடுத்துவந்த நான்கு நாட்கள் நான் மிகுந்த நிம்மதியுடன் கடையில் இருந்தேன். ஐந்தாம்நாள் காலை எனது இரண்டு கடையிலும் உள்ள அனைத்து ஊழியர்களையும் அழைத்து, நான் இனி என் வாழ்க்கையில் வியாபாரம் செய்ப்போவதில்லை என்று முடிவெடுத்துவிட்டேன். எனவே இப்போது உள்ள கடைகளை எனது மேளாளர்களிடம் ஒப்படைக்கிறேன். அவர்கள் தொடர்ந்து கடையை நடத்துவார்கள்.

இவ்வளவு காலம் எனக்கு ஒதுத் துழைத்த உங்களுக்கு நன்றி என்று கூறிவிட்டு, சட்டென்று கடையைவிட்டு வெளியேறி வண்டியை எடுத்துக்



கொண்டு வீட்டிற்கு வந்து விட்டேன். அப்போது காலை மணி நான்கு.

தூங்கிக்கொண்டிருந்த என் மனைவியை எழுப்பி நான் எடுத்த முடிவைக்கூறினேன். இவ்வளவு காலமாக கஷ்டப்பட்டு வளர்த்து வந்த வியாபாரத்தை ஒரே நாளில் விட்டு விட்டு வந்து விட்டீர்களே! நமக்கு இரு பெண்குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி சிந்தித்தீர்களா என்றெல்லாம் என் மனைவி என்னைக் கேட்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவள் என் கைகளைப் பிடித்துக் கொண்டு "ரொம்ப சந்தோசம்" என்றார்.

சற்று நேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு இப்போது என்ன செய்யப் போகின்றீர்கள் என்றார் என் மனைவி "சீரடி செல்கிறேன்" என்றேன் நான். உண்மையாகவா என்று வியந்தார் என்மனைவி, ஆம் உண்மைதான். என் சத்குருவைத் தேடி என்றேன் நான்.

- (தொடரும்)

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

பக்த லீலாமிர்தம் - 4

மதிப்பிற்குரிய சாய் மகராஜ் குருவை தேடி இதழ் ஆசிரியர் குருஜி ஸ்ரீராம் சாய் அவர்களுக்கும் இதழின் வாசகர்களான சாய் உறவுகள் அனைவருக்கும் காரைக்கால் திரு மலைராயன்பட்டினத்தைச் சேர்ந்த மோகன் சாய்ராம்மின் பணிவான வணக்கங்கள்.

நான் சாய்பாபாவை வணங்குவ தற்கு முன்பாக பாபாவை யாரும் எனக்கு அறிமுகம் செய்யவில்லை. பாபாவே என்னை தன் பக்தனாக ஆக்கிக் கொண்டார். ஆம், ஒரு நாள் நான் வேலை செய்யும் இடத்தில் வேலையை முடித்துவிட்டு வாசலில் ஓய்வாக அமர்ந்து இருந்தேன். அப்போது காற்றில் பறந்து வந்த ஒரு காகிதம் என் காலில் வந்து ஒட்டிக்கொண்டது.

நான் உடனே எதார்த்தமாக அந்த பேப்பரை எடுத்துப் பார்க்க, அதில் சாய் பாபா ஒர் கல்லின் மேல் ஒரு காலின் மேல் இன்னொரு காலைப் போட்டு அமர்ந்த நிலையில் இருந்த புகைப்படத்தைக் கண்டேன். காற்றில் அடித்துவந்த அந்தப் புகைப்படத்தை என்னால் தூக்கி எறியமுடியவில்லை. அதைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டேன்.

ஒரு சில நாட்களில் 2011 வது புது வருட காலண்டர் ஒன்று எனது வீட்டிற்கு வந்தது. நான் அதைப் பிரித்துப் பார்த்தேன். அதிலும் சாயிபாபா ஆசீர்வதிப்பது போல் உள்ள படம் இருந்தது. அதைப்பார்த்த பிறகு, நானாகவே பாபாவிற்கு ஒன்பதுவார



விரதம் கடைப்பிடித்தால் என்ன என்று தோன்றவே, அந்த வாரத்தில் இருந்தே பயபக்தியுடன் சாயிபாபாவிற்கு விரதம் இருக்க ஆரம்பித்தேன்.

கடைசிவாரம் சாயி பாபா கோவி லுக்கு சென்று விரதத்தை முடித்துக் கொள்ளலாம் என்று கோவிலுக்குச் சென்றேன். நான் சென்ற போது மதிய ஆரத்தி நடந்து கொண்டிருந்தது. நானும் ஆரத்தியில் கலந்து கொண்டேன். ஆரத்தி முடிந்ததும் எனது அருகில் உள்ள சாய்ராம் அவராகவே வந்து என்னிடம், நீங்கள் வீட்டிற்கு செல்லும் முன் என்னிடம் சொல்லிவிட்டுச் செல்லுங்கள் என்றார்.

நானும் ஆரத்தி முடிந்ததும் அவரிடம் கூறிவிட்டு புறப்படும்

சமயம் ஒரு தொலை பேசி எண்ணைக் கொடுத்து அந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ள சொன்னார். நான் வீட்டிற்கு வந்து அந்த எண்ணை தொடர்பு கொண்டேன். எனது முகவரியைக் கேட் டனர். நான் முகவரியைக் கூறினேன்.

அடுத்த ஒரு வாரத்தில், சாயி சத்சரிதமும் பாபா அமிர்தவாணி புத்தகமும் பாபாவின் அழகிய புகைப்படம் ஒன்றும் எனக்கு தபாலில் அனுப்பி வைத்தார்கள்.

ஒன்பது வாரம் விரதம் முடிந்து வீட்டிற்கு வந்து எனது வீட்டு திண்ணையில் அமர்ந்திருந்தேன். எங்கள் எதிர் வீட்டு பையன் என்னிடம் வந்து என்ன அங்கிள் காவிவேட்டி கட்டியிருக்கின்றீர்கள் என்று கேட்க, நான் சாயி பாபாவிற்கு ஒன்பது வாரம் விரதம் இருந்ததையும், இன்று சாயிபாபா கோவிலுக்குச் சென்று விரதம் முடித்து வந்ததையும் கூறினேன்.

அவனோ, அப்படியா என்று ஆச்சர்யத்தோடு கேட்டவன், சற்று இருங்கள் இதோ வந்து விடுகின்றேன் என்று வீட்டிற்குச் சென்றுவிட்டு வந்து என்னிடம், நாங்கள் சீரடிக்குச் சென்று வந்தோம். இந்த உதி பாக்கெட்டை யாருக்கு கொடுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அது உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று இருந்திருக்கின்றது இந்தாருங்கள் உதி பாக்கெட் என்று என்னிடம் கொடுத்தான். நான் பாபாவின் மகிமையை எண்ணி நன்றி கூறினேன்

எங்களது பெரிய மகன் 10 ம் வகுப்பு தேறி விட்டால் திருப்பதி சென்று மொட்டை போடுகின்றோம் என்று வேண்டிக்கொண்டோம். பையனும் பத்தாம் வகுப்பு தேறி விட்டான். குடும்பத்துடன் திருப்பதி



செல்வதென்றால் நிறைய செலவு ஆகுமே என்று நான் தயங்கிக் கொண்டிருந்தேன்.

என் மனைவியோ, இறைவனுக்கு வேண்டிக்கொண்டால் உடனே அதை நிறைவேற்ற வேண்டும் என்று கூற, நான் மனக்கஷ்டத்தில் அன்று பாபா கோவிலுக்கும் செல்லாமல் வேலைக்குச் சென்று விட்டேன்.அன்று வியாழக்கிழமை வேறு.

வேலை செய்யும் இடத்திற்கு ஒரு கடலை வண்டி வரவே என்னுடன் வேலை செய்பவர்கள் ஆளுக்கொரு கடலை பொட்டலம் வாங்க, என் நண்பரிடம் எனக்கும் ஒரு கடலைப் பொட்டலம் வாங்கச் சொன்னேன். அவரும் வாங்கிக் கொடுக்க, நான் கடலைப் பொட்டலத்தை பிரிக்க, பொட்டலத்திற்குள் ஏதோ கறுப்பாக தெரிய நான் கடலையை அருகில் உள்ள தட்டில் கொட்டிவிட்டு பேப் பரைப் பார்த்தேன். அதில் அமர்ந்த நிலையில் சாயிபாபாவின் புகைப்படம்.

அந்த படத்தைப் பார்த்த உடன் எனக்கு மெய் சிலிர்த்து. அது சக்தி



விகடனில் வெளிவந்த புகைப்படம். அதன் ஓரத்தில் இரண்டு வரிகள் அச்சாகியிருந்தது. அது, "மகான்கள் நினைத்தால் நடக்காது என்பதே இல்லை"

திருப்பதி செல்ல அதிக பணமா குமே என்று கவலைப்பட்ட எனக்கு இந்த போட்டோ கிடைத்த மறு வாரமே திருப்பதி செல்ல தேவையான பணம் கிடைத்தது. பாபாவின் ஆசியால் அன்றே நாங்கள் குடும்பத்துடன் திருப்பதி பெருமாளை தரிசனம் செய்து அனைவரும் மொட்டை போட்டு பிராத்தனையை முடித்துகொண்டு ஊர் திரும்பினோம்

எனது இளைய மகன் + 2 முடித்து மேற்கொண்டு படிப்பிற் காக ஒரு கல்லூரியில் பி. இ. படிக்க விண்ணப்பம் போட்டி ருக்கின்றான். கல்லூரி ஆரம்பித்த நிலையில் என் மகனுக்கு கல்லூரியில் இருந்து எந்த விதமான பதிலும் வரவில்லை.

எனது மனைவி என்னிடம் மிகவும் வருத்தப்பட்டார்கள். நான் என் மனைவியிடம் கவலைப்படாதே! பாபா நம் மகனை கைவிடமாட்டார். நான் பாபாவிடம் பிரார்த்திக்கின்றேன் என்று கூறிவிட்டு வேலைக்குச் சென்று விட்டேன்.வேலைக்குச் செல்லும் வழியில் பாபா ஆலயம் சென்று என் மகனுக்கு அருகிலேயே நல்ல கல்லூரி கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.

அன்றே எங்கள் வீட்டிற்கு வந்த உறவினர் ஒருவர் என் மகனிடம் என்ன கல்லூரி ஆரம்பித்தாயிற்று நீ கல்லூரிக்குச் செல்லவில்லையா என்று கேட்க, என் மகன் விபரத்தைச் சொல்ல, உறவினரோ, என்னுடன் உடனே வா என்று கூட்டிச்சென்று அருகில் இருக்கும் கல்லூரியில் அவனுக்கு பிடித்த, பி.எஸ்.சி கம்யூட்டர் சயின்ஸ் சீட் வாங்கிக் கொடுத்து அன்றே வகுப்பில் சேர்த்து விட்டார்.

இதுபோல் என் வாழ்க்கையில் சாயிபாபா நிறைய அதிசயங்களை நிகழ்த்திக்கொண்டே இருக்கின்றார். கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் சாயிபாபா என்பதை ஒவ்வொரு விநாடி யும் பாபாவின் பக்தர்கள் உணர்ந்து கொண்டே இருக்கின்றார்கள்.

ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி!

பொறுமை !







நம்பிக்கை!!

மூலவர் ஸ்ரீ யோக சயன சாய் (சமாதி)

108 கோடி ஸ்ரீ சாய் 11 உறுதி மொழிகள்

(SRI SAI 11 ASSURANCES)

சொல்லிக்கொண்டே செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் எழுதுங்கள்

அன்புடையீர் வணக்கம்.

108 கோடி ஸ்ரீ சாய் 11 உறுதி மொழிகள் (SRI SAI BABA 11 ASSURANCES) சொல்லிக்கொண்டே செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் எழுதி " ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவ சாயி சமேத 1 டன் எடை கொண்ட வெள்ளைகல் (White Stone) ஸ்ரீ திவ்ய சாயி அனுக்கிரஹ யந்திரத்தின் கிழியை சமர்ப்பிக்கும் கூட்டு சாதனை நிகழ்வினைக் துவக்கியுள்ளோம்.


ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் அருகில் புலிவலத்தில் ஸ்ரீ யோக சயன சாய் (சமாதி) ஆலயத்தில் பாபா நிகழ்த்தப் போகும் ஒரு மிகப் பெரிய உலக அதிசயம் (SAI INCREDIBLE MIRACLE)

எழுதுங்கள் ! செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் 108 கோடி ஸ்ரீ சாயி 11 வாக்குறுதிகள் (SRI SAIBABA 11 SUTTRAS) 1டன் எடை கொண்ட வெள்ளைகல் (White Stone) ஸ்ரீ திவ்ய சாய் அனுக்கிரஹ யந்திரத்தின் கிழியை பிரதிஸ்டை செய்யும் மஹா பாக்கியத்தைப் பெறுங்கள்.

ஸ்ரீ சாயி உறுதிமொழிகள்
(SAI 11 EKKADAS SUTTRAS)
எழுதும் செம்பு முலாம் பூசப்பட்ட தகடு

இலவசம்

உங்கள் முகவரியை 8754316316
SMS / Whatapp செய்து பெறவும்



Temple Address

SRI YOGA SAYANA SAI (SAMATHI) TEMPLE
SAI HEALTHLINE FOUNDATION
No.62/2, Kulathu Street, Saipuram, Near Sholingar,
PULIVALAM (Po) Banavaram (Via),
Ranipet Dist. Pin : 632505. Tamil Nadu

Google Pay PhonePe மூலமாகவும் செலுத்தலாம்
8754 316 316

email : shelfoundation1956@gmail.com

தொடர் –20

சாய் சரவணன்

"அதி தேவதை"

நானா சாகேப், சாயிநா தரை தரிசிக்கும் முன் இராதாகிருஷ்ணமாயிடம் பேசுவதற்காக அவளது இருப்பிடமான சாலாவிற்குச் சென்றார். நானா தன்னை தேடி வந்ததைக் கண்ட அன்னை அவரை, வாருங்கள் பெரியப்பா என வரவேற்றாள்.

நானா அன்னையைப் பார்த்து, ஆயி நான் உன்னிடம் முக்கியமான விசயம் பேச வேண்டும் என்றார். உடனே அன்னை எனக்குத் தெரியும் பெரியப்பா, என்னைப் பற்றி சிலர் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தானே பேச வேண்டும்.

இங்கு வந்த ஒரு வாரத்திற்குள்ளாகவே இங்குள்ளவர்களைப் பற்றி தெரிந்து கொண்டுவிட்டேன் பெரியப்பா. பாபா தன்னை மட்டுமே நேசிக்க வேண்டும். அவரது கருணை மழையின் ஒரு துளிகூட மற்றவரின் மீது படக்கூடாது என்கின்ற சுயநலமான எண்ணத்தினால் பார்வைகள் வேறுபடுகின்றன பெரியப்பா.

நான் செய்யும் சேவைகள், மற்றவர்களை பாபாவின் சேவையில் ஈடுபடுத்துவது, பாபாவின் பின்னால் லெண்டித்தோட்டம் வரை செல்வது, பாபாவை மகராஜ் என்று அழைப்பது, பாபாவின் பூஜைக்காக பக்தர்களிடம் வெள்ளி சாமான்கள் கேட்டு வாங்குவது



என இவை எல்லாம் பலர் கண்களை உறுத்துகின்றன.

பெரியப்பா உங்களுக்கு என்னை நன்றாகத் தெரியும். யார் தடுத்தாலும், என் சங்கல்ப்பத்திலும், பாபாவின் சங்கல்பத்திலும், பாபாவிற்கு செய்யப் படவேண்டிய சேவைகளில் எந்த குறையும் இருக்கப் போவதில்லை. அவரே பாண்டுரங்கன். சீரடியே பண்டர்பூர். இது மிக விரைவில் எல்லோருக்கும் தெரிய வரப் போகும் சத்தியம். இச்சிறிய கிராமமான

சீரடி இன்னும் சில வருடங்களில் தேசமெங்கும் போற்றப்படும் புண்ணிய பூமியாக திகழும் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐய்யமும் இல்லை என்றாள்.

(நம் அன்னை இவ்விதம் நானாவிடம் கூறினாள். ஆனால் அன்னை சீரடிக்கு வருவதற்கு முன்னமே 1880 ஆம் ஆண்டே பாபா சீரடியின் எதிர்காலம் குறித்து பேசியதும் அன்னை கூறியதும் ஒன்றாகவே இருந்தது. இதிலிருந்து இருவரது சங்கல்பமும் ஒன்றாகவே இருந்தது என்பது தெரிகிறதல்லவா.)

தன் அடியவர்களிடம் பாபா கூறியது, இந்த சீரடியில் பெரிய அடுக்கு மாடிக் கட்டிடங்கள் எழும்பும். திருவிழாக்கள் நடக்கும், சுபேதாரர் போன்ற பெரிய, பெரிய மனிதர்கள் வருவார்கள். யானைகள், குதிரைகள்,சங்கரரும்கூட வருவார். பீரங்கிகள் முழுங்கும் சத்தம் திசைகள் எட்டும் எதிரொலிக்கும். என்றார். இதைக்கேட்ட மக்கள் இந்த எதற்கும் உதவாத கிராமத்திற்கா இவ்வளவு புகழ் வரப் போகிறது என்று நகைத்தனர்.

ஆனால் சில ஆண்டுகளில் பாபா உரைத்தது உண்மையாயிற்று. பாபா தன் தூரதிருஷ்டிப் பார்வையால் எதிர் காலத்தில் சீரடி எப்படி இருக்கும் என்று உரைத்தார். நம் அன்னையோ எதிர்காலத்தில் சீரடி பண்டரிபுரமாக புண்ணியத்தலங்களின் உறைவிடமாக திகழும் என்றுரைத்தாள்.

இதில் இருந்து சாயிநாதருடைய தெய்வீக சங்கல்பத்தை நிறைவேற்றும் பொருட்டே அன்னையை சாயி சீரடிக்கு இழுத்தார் என்பது புலப்படும். இனி அன்னை, நானாவிடம் பேசிய உரையாடலை கவனிப்போம்.

அவதார புருஷனான பாபா நடக்கும் இந்த மண்ணானது பக்தர்களால் சேகரிக்கப்பட்டு பூஜிக்கப்படும். துனியில் இருந்து வெளிப்படும் உதி என்னும் விபூதி சேகரிக்கப்பட்டு எங்கும் விநியோகிக்கப்படும். பக்தர்களுக்கு, நம்பிக்கையையும், ஆறுதலையையும் உதி அளிக்கும்.

இந்த உதியானது பக்தர்களுக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அருளி உடல், மன நோய்களை நிரந்தரமாகக் குணப்படுத்தும். நம் சாயி வெறும் ஏழை பக்கீர் அல்ல, அவரை ஏழை பக்கீர் என்று நினைப்பது நமது அறியாமை. மும்மூர்த்தியும் பாபாவின் வடிவில் இருக்கின்றார்கள். அவருக்கு நான்கு வேளை ஆரத்தி பாடி, தூப தீபங்கள் காட்டி மலர்களைத் தூவி அவரை போற்றி அடிபணிய வேண்டும்.

இதற்காகவே எனது உடல், பொருள், ஆவியை அர்பணித்து விட்டேன். அவரே என் புகலிடம், தாய், தந்தை, குரு, தெய்வம், தோழன், பாதுகாக்கும் பதி, பிரபு எல்லாம் அவர்தான். இனி அவரையன்றி வேறு யாரையும் போற்றி வணங்குவதில்லை. யார் என்ன சொன்னாலும், என் செயல்களை எப்படி விமர்சித்தாலும் எனக்கு அக்கறை இல்லை.என் வாழ்வின் ஒரே குறிக்கோள், பாபாவின் சேவையிலேயே என் வாழ்நாளைக் கழிப்பது மட்டும் தான் என்றாள் அன்னை.

நீ கூறுவதெல்லாம் சரிதான் ஆயி, ஆனால்.. என்று என்று இழுத்தார் நானா. அன்னை அவரை கையமர்த்தி சற்று உணர்ச்சிவயப்பட்டு, நான் அப்படி என்னதான் தவறு செய்து விட்டேன் பெரியப்பா? அனாதரவான, ஏழை இளம் விதவை என்பது



எனது தவறா? கடவுள் என்னை இந்நிலையில் வைத்துள்ளார் அதற்கு நானா பொறுப்பு?

மற்ற பெண்களான லட்சுமிபாய், பாயிஜாபாய் இவர்களுக்கு இருக்கும் சலுகை ஏன் எனக்கு மறுக்கப்படுகிறது இவர்கள் குடும்பப் பெண்கள். கணவனின் ஆதரவில் இருப்பவர்கள். நான் திக்கற்றவள் அதுதானே வித்தியாசம்? அவர்களுக்கு ஒரு நியாயம் எனக்கு மற்றொன்றா?

இருக்கட்டும். அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. சாயி மகராஜின் சேவையே என் லட்சியம். சிரத்தா, ஸபூரியே நான் கொடுக்கும் குரு தட்சிணை என முடித்தாள் அன்னை.

நானா, ஆயிக்கு பதில் தரமுடியாமல் திணறினார். பிறகு கூறினார், ஆயி உனது நம்பிக்கை, உனது லட்சியம், உனது தெய்வீகத் தன்மை, மற்றும் பாபாவின் மீது நீ கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையாவும் உனது வாழ்கை முழுமைக்கும் துணையாக வரும். கவலைப்படாதே! என்று கூறிவிட்டு, நான் பாபாவை பார்க்கச் செல்கின்றேன் என்றபடி புறப்பட்டார்.

அன்னை, தான் சீரடியில் வாழ்ந்த சொற்ப காலங்களில் இதுபோன்றே அறியாத மக்களின் ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் பொருட்படுத்தாமல் சகிப்புத்தன்மையோடு தன்னுடைய ஒரே குறிக்கோள் "சாயிநாதனே பண்டரி நாதன், சீரடியே பண்டரிபுரம்" என்ற சங்கல்பத்தோடு மனதை ஒரு நிலைப் படுத்தி சாயி சேவையே தனது உயிர் மூச்சு என்று தன் வாழ்வை தியாக வாழ்வாக மாற்றிக் கொண்டாள்.

ஆகவேதான் அன்னை பாபாவின் பக்தர்களிலேயே ஓர் பிரேம ரத்தினமாக திகழ்ந்தாள். நூற்றாண்டுகள் கடந்தும் பக்தர்களின் மனதில் சோதியாய் மிளிர்கின்றாள்.

இனிநாம் சற்குரு சாயிநாதருக்கு முறையான வழிபாடு சீரடியில் எப்படி தொடங்கியது என்பதைக் காணப் போகின்றோம். நாம் பல சென்மங்களில் செய்த புண்ணிய பலன்களின் விளைவாக சாயிநாதரை வணங்குகிறோம். அவர் ஒரு போதும் எவரையும், எந்த சீவனையும், நேசிக் காமல் இருந்தது இல்லை. காணும் வஸ்துக்களில் எல்லாம் இறைவனையே கண்டார். ஏழை, எளிய மக்களைத் தேடிச் சென்று உதவினார்.

சாயிபாபாவின் ஆரம்ப கால வாழ்வை கவனிக்கையில் பாபாவை சீரடி மக்கள் ஒரு பக்கீராகவே கண்டு லட்சியம் செய்யாமல் இருந்தார்கள். அவர் பெரும்பாலும் வேப்ப மரத்தின்

நிழலிலேயே வாசம் செய்தார். பாயிஜாபாய் தினந்தோறும் பாபாவிற்கு உணவினை தந்து வந்தாள். அவர் காணாமல் போணாலும், பாபாவைத் தேடிக் கண்டுபிடித்து உணவினைத் தருவாள்.

பாபா காடுகளில் திரிவதை விட்டு விட்டு, நாளடைவில் கிராமத்து வீதிகளில் நடக்க ஆரம்பித்தார். சில வீட்டின் வாசலில் மணிக்கணக்காக நிற்பார். சிலர் பாபாவிற்கு உணவு தருவர். அதை சேகரித்துக் கொண்டு பாழடைந்த மசூதிக்குச் சென்று விடுவார். ஆரம்ப காலங்களில் பாபா தகியா என்ற இடத்தில் காலில் சலங்கை கட்டிக்கொண்டு நடனமாடவும் செய்தார்.

சில நேரங்களில் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். பாபாவே மக்களை சந்தித்து அவர்களுடைய நோய்களை தீர்த்தருள்வார். பச்சிலையை கொண்டே நோய்களை குணப்படுத்துவார்.

பாம்புக்கடிக்கு மருந்து தயாரித்து கொடுத்து குணப்படுத்துவார். தொழு நோயை குணப்படுத்த பாம்பின் விசத்தைக் கொண்டு மருந்து தயாரித்து கொடுப்பார். பாபா சீரடியில் பொதுவான ஒரு இடத்தை தேர்ந் தெடுத்து அதை செம்மைப் படுத்தி, பூச்செடிகளை நட்டு பூந்தோட்டத்தை உருவாக்கினார்.


– (தொடரும்)

கோதுமை மூட்டை

துவாரகாமாயியில் ஒரு கண்ணாடி கதவுடன் கூடிய அலமாரியில் கோதுமை நிரம்பிய மூட்டையை பார்க்கலாம். பாலாஜி நெவாஸ்கார் என்ற அடியவர் பாபா தினந்தோறும் நடந்து வரும் சாலையை சுத்தம் செய்யும் சேவையை செய்து வந்தார்.

அவருடைய வயலில் ஒவ்வொரு ஆண்டும் அறுவடை முடிந்ததும், கோதுமை தானியங்களை மூட்டைகளில் கட்டி வண்டிகளில் ஏற்றி பாபா வாழ்ந்து வந்த மசூதிக்கு கொண்டு வருவார். பாபா தனக்கு கொடுக்கும் கோதுமை மூட்டைகள் மட்டும் பெற்றுக் கொண்டு மீதமுள்ளவற்றை பாபாவிற்கே சமர்பித்து விடுவார்.

பாபாவும் பாலாஜி நெவாசின் வாழ்கைக்கு போதுமான மூட்டைகளை கொடுப்பார். தற்போது ஒவ்வொரு ஆண்டும் ராம நவமியன்று பழைய மூட்டை எடுக்கப்பட்டு அந்த இடத்தில் ஒரு புதிய மூட்டை வைக்கப்படுகிறது.



பாபாவின் பல்



காஷிபாய் என்ற பெண் நிபெட் என்ற ஊரைச் சேர்ந்த மணமகனுக்கு மணமுடிக்கப்பட்டதால், சீரடியில் உள்ள தன்னுடைய பிறந்த வீட்டை விட்டு கணவனோடு நிபெட்டுக்கு சென்று விட்டாள். மணவாழ்க்கை ஆரம்பத்தில் மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

விவசாயியான அவர்களின் பொருளா தாரமும் வலுவாகவே இருந்தது. ஆனால் ஒரு வருடத்திற் குள்ளாகவே அவளது கணவன் இறந்து போனான். அந்த நேரத்தில் கர்பிணியாக இருந்த காஷிபாய்க்கு ஒரு மகன் பிறந்தான். அந்தக் குழந்தைக்கு மாதவ் என்று பெயரிட்டாள். மாதவ் ஐந்து மாதக் குழந்தையாக இருக்கும்போது அவள் சீரடிக்கு தன் பிறந்தவீட்டிற்கே வந்து விட்டாள். காஷிபாய் அனைத்து குடும்ப வேலைகளையும் பொறுப்பாக செய்து வந்ததோடு மாதவையும் நன்கு வளர்த்து வந்தாள்.

மாதவ்க்கு இரண்டு வயதான போது காஷிபாயின் பெற்றோர் வறுமையில் இருந்தனர். எனவே அவள் வயல் வேலைக்குப் போவது எனத் தீர்மானித்தாள். தினந்தோறும் காலையில் மாதவ்வை தூக்கிக் கொண்டு வந்து துவாரகாமாயியில் விட்டுவிட்டு வயல் வேலைக்குச் சென்று விடுவாள். மாலையில் வந்து மாதவ்வை தூக்கிக் கொண்டு தன் இல்லத்திற்குச் செல்வாள்.

இப்படியாக மாதவ் முழுமையாக பாபாவின் கவனிப்பில் வளர்ந்தான். மாதவ்விற்கு நான்கு வயதான போது பாபாவின் தினசரி நடவடிக்கைகளில் அவருக்கு உதவியாக செயல்புரிந்து வந்தான். பாபா அவனுக்கு தினந் தோறும் ஒரு ரூபாய் கொடுத்து வந்தார். எனினும் காஷிபாய் அத்தியாவசியத் தேவைகளுக்குக்கூட போதுமான வருமானமின்றி மிகவும் சிரமப்பட்டாள்.

ஒரு நாள் அவள் மாதவ்வை கூட்டிப் போக துவாரகாமாயி வந்த போது பாபாவிடம், பாபா நீங்கள் அனைவருக்கும் பெரிய தொகையைக் கொடுக்கின்றீர்கள். உங்களுடைய வேலைகளில் மாதவ் உங்களுக்கு கூடமாட ஒத்தாசையாக உதவிகள் செய்த போதும் நீங்கள் எப்படி

அவனுக்கு ஒரு ரூபாய் மட்டுமே கொடுக்கலாம்? இது கொஞ்சம் கூட நன்றாக இல்லை. என்று கூறி சலித்துக் கொண்டாள்.

அதற்கு பாபா அமைதியாக, மற்றவர்களுக்கு நான் கொடுக்கும் பணம் எந்த நேரமும் நிறுத்தப்படும். ஆனால் மாதவ்விற்கு பணம் கொடுப் பதை ஒருபோதும் நிறுத்த மாட்டேன். என்று கூறினார். மேலும் "நானே உன்னைப் போன்ற ஆதரவற்ற பெண் களைப் பாதுகாப்பவன்" என்று கூறினார்.

காஷிபாய் பாபா கூறியதன் அர்த் தத்தை சரியாக புரிந்து கொள் ளாமல், "ஓ..என் கணவன் ஐந்து வருடங்களுக்கு முன்பே இறந்து விட்டார் என்று கூறுகிறீர்களா" என்று கேட்டாள். இதைக்கேட்ட பாபா கடுங்கோபம் கொண்டார். அவருடைய ஆக்ரோஷத்தைக் கண்ட காஷிபாய், சத்தமில்லாமல் மாதவ்வை தூக்கிக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள்.


இச்சம்பவத்தால் பயந்துபோன காஷிபாய் இரண்டு மூன்று நாட்களாக துவாரகாமாயி பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. ஆனால் பாபா மட்டும் அடிக்கடி மாதவ்வை எங்கே என்று கேட்டு வந்தார். பிறகு அவனை தூக்கி வரச் சொல்லி காஷிபாய் வீட்டிற்கு ஒரு நபரை அனுப்பி வைத்தார்.

அவரோடு வந்த காஷிபாயும், மாதவ்வும்,பாபாவின் முன்பாக பவ்யமாக நின்றார்கள். அவர்களைப் பார்த்து புன்முறுவல் பூத்த பாபா, அவர்களை தன்னருகே வருமாறு வாஞ்சையோடு அழைத்தார்.


அதன்பிறகு, ஆடிக்கொண்டிருந்த தனது பற்களில் ஒன்றைப் பிடுங்கி அதை ஒரு கைப்பிடி உதியில் வைத்து ஒரு பழைய துணியில் கட்டி காஷிபாயிடம் கொடுத்து, இதைப் பத்திரமாக வைத்துக் கொள். அல்லா நன்மையே செய்வார். என்று கூறினார். வீடு திரும்பியதும் காஷிபாய் பாபாவின் பல்லையும், உதியையும் ஒரு தாயத்தில் வைத்து கட்டி அதை மாதவ்வின் வலது கையில் கட்டிவிட்டாள்.

வெகுநாட்களுக்குப்பின் காஷிபாய் இறந்ததும், மாதவ் தன் தந்தை வீடு உள்ள நிபெட்டிற்கு சென்று விட்டான்.

தே நேரம் அகமது நகரில் வசித்து வந்த தாமோதர் ராஸ்னே(தாமு அண்ணா) குடும்பத்தோடு புனே நகருக்கு குடிபெயர்ந்தார். அவர்கள் புனே சிவாஜி நகரில் ஒரு அடுக்கு மாடிவீட்டில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி குடிபோனார்கள். அவரது



புனே சிவாஜி நகர் ஆலயத்தில் பாபாவின் பல் உள்ள பேழை



சிவாஜிநகர் கோயிலில் உள்ள கல்வெட்டு

மகன் நானா சாகிப் அந்த அடுக்கு மாடி வீட்டின் கீழ் உள்ள இரண்டு அறைகளை வாங்கி 1945 ஆம் ஆண்டு அதை ஒரு ஆலயம் போல் மாற்றி அதை பாபாவிற்கு அர்பணித்தார். பாபாவை வணங்க சுற்று வட்டாரத்தில் இருந்தும், வெகுதூரத்தில் இருந்தும், ஏராளமான பக்தர்கள் தினந்தோறும் கூடுவது வழக்கமாயிற்று. இந்த எண் ணிக்கை படிப்படியாக அதிகரித்த வண்ணம் இருந்தது.

நானா சாகிப் பெருகிவரும் பக்தர்கள் கூட்டத்தினை சமாளிக்க, பாபாவை வசதியாக தரிசிக்கவும் ஒரு விசாலமான ஆலயத்தை கட்ட வேண்டும் என்று தீர்மானித்தார். அதற்கு நிகம் என்ற தனது நண்பரை நாடினார். அவரும் தான் பார்த்து வந்த காவல்துறைப் பணியை ராஜினாமா செய்துவிட்டு புனேவிற்கு வந்து பாபாவிற்கு ஆலயம் கட்ட முனைந்தார். விரைவிலேயே அவர்களின் வீட் டிற்கு எதிரிலேயே மிக அழகிய ஆலயம் கட்டப்பட்டு அங்கு பாபாவின் படம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பாபாவின் ஆலய கட்டுமானத்தில் நிகம் தன்னுடைய முழு சக்தியையும் செலவிட்டார். அனைத்து ஆலயப் பணிகளிலும் நிகம் தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண்டார்.

ஒரு நாள் இரவு அவருக்கு ஓர் கனவு வந்தது. அதில் பாபா தோன்றி, அவரை நிபெட் என்ற ஊருக்குச் சென்று அங்கே வசிக்கும் மாதவ் என்பவரிடம் இருந்து தன்னுடைய பல்லினைப் பெற்றுக் கொள்ளும்படியும், அறிவுறுத்தினார்.

ஏற்கனவே நிகம், மாதவ்வை பலமுறை சீரடியில் சந்தித்திருப்பதால் இது மிகவும் எளிதாகிப்போனது. அதே நேரத்தில் மாதவ்வின் கனவிலும் பாபா தோன்றி, "நாளை உன்னைப் பார்க்க வரும் நபரிடம் பல்லைக் கொடுத்து விடு" என்று ஆணையிட்டார்.

நிகம், நிபெட்டில் உள்ள மாதவ்வின் இல்லத்திற்குச் சென்றபோது மாதவ் தனக்காக காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்தார். நிகம்மிற்கு தோன்றிய கனவைக் கேட்டு மிகுந்த வியப்படைந்த மாதவ், பாபாவின் பல் உள்ள தாயத்தை மகிழ்ச்சியோடு நிகம்மிடம் ஒப்படைத்தார்.

1950 ஆம் ஆண்டு, பூஜ்ய ஸ்ரீ பி.வி. நரசிம்ம சுவாமிஜி அவர்கள், பாபாவின் திருஉருவப்படம், பாபாவின் பல் மற்றும் புகைக் குழாய், ஆகியவற்றை முறைப்படி அங்கு ஸ்தாபிதம் செய்தார். புனே சிவாஜி நகரில் கட்டப்பட்டுள்ள ஆலயத்தில் பாபாவின் வெள்ளித்திருப் பாதுகைகள் வைக்கப்பட்டுள்ள பேழையில், பாபாவின் பல்லும், புகைக் குழாயும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

சியாம் கர்ணா



துவாரகாமாயியின் உள்ளே நுழையும் போது அதன் மேற்கு பக்கச் சுவரில் பாபா கால்மேல் கால் போட்டபடி அமர்ந்திருக்கும் ஓவியமும், அதற்கு கீழே அவர் அமர்ந்திருந்த பாறாங்கல் ஆசனத்தையும் பார்க்கலாம். அதன் ஒரு பக்கம் ஒரு சிறிய குதிரையின் சிலையும், மறுபக்கம் புலியின் சிலையையும் காணலாம்.

சீரடிக்கு அருகில் உள்ள வயந்தரா என்ற கிராமத்தை சேர்ந்த ஒரு குதிரை வியாபாரிக்கு பெண் குதிரை ஒன்று இருந்தும் அவற்றிற்கான குட்டிகள் இல்லை. ஒருவேளை குதிரை மலடாயிருந்திருக்கலாம்.

1909 ம் ஆண்டு அந்த குதிரையின் சொந்தக்காரர் சீரடிக்கு பாபாவை தரிசனம் செய்ய வந்தார். தனக்கும், தன் குதிரைக்கும் புத்திரபாக்கியம் இல்லாமல் இருப்பதைக் கூறி தங்கள் இருவருக்கும் குழந்தை பாக்கியம் கிட்ட வேண்டும்மென்று ஆசிகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

பாபா மனமிரங்கி அவர்கள் இருவரையும் ஆசிர்வதித்தார். வருட முடிவில் அந்த குதிரையின் சொந்தகாரருக்கு புத்திர பாக்கியம் கிடைத்தது. அதேபோல் அவர் பெண் குதிரையும் குட்டி போட்டது. கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டி சீரடி வந்து குதிரைக் குட்டியை பாபாவிடம் ஒப்படைத்தார்.

அந்த குதிரை சிகப்பு நிற உடலோடும், கருநீல காதுகளோடும் இருந்ததால் பாபா அந்தக் குட்டியை சியாம் கர்ணா என்று பெயர் சூட்டி அழைக்கத் தொடங்கினர்.

பாபா தினசரி தன் கையாலேயே அதற்கு நெய் கலந்த அன்னம் மற்றும் வெல்லத்தை ஆகாரமாக கொடுத்து வந்தார். அதற்கு நடனம் கற்பிக்க பயிற்சியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். ஒவ்வொரு முறையும் ஆரத்தி ஆரம்பிக்கும் முன்னர் அது பாபாவின் முன்பு தரையில் தலைவைத்து வணங்கும்.

பாபா அதை ஆசிர்வதித்து அதன் முன் நெற்றியில் உதியை இடுவார். அந்த குதிரை இறந்த பின் அதை வெண்டி தோட்டத்தில் புதைத்தார்கள். லெண்டி தோட்டத்தில் சீரடி சாயி சன்ஸ்தானின் புத்தக விற்பனை நிலையத்திற்கு முன்பு இந்தச் சிலை இருக்கிறது. அதன் மற்றொரு சிறிய உருவச்சிலை தான் துவாரகாமாயியில் இருக்கிறது.

ஒரு முறை சாப்பிட மறுத்தற்காக குதிரையின் பயிற்சியாளர் சாட்டையால் விளாசித் தள்ளி விட்டார். பாபா அவனைக் கூப்பிட்டு கடிந்து கொண்டு தன் முதுகை அவனுக்குக் காட்டினார். பாபாவின் முதுகில் சிகப்பு நிறத்தில் சாட்டையால் அடிப்பட்டது போன்ற காயம் காணப்பட்டது. அந்தக் குதிரையின் உடலில் இருக்கும் உயிரும் நானே எனப் பயிற்சியாளரிடம் கூறினார்.

காவிரிக்கரையில் ஓர் பரமஹம்சர்

ஸ்ரீ இராம சாது!

பாக்கிஸ்தான் பிரிவினைக்கு முந்தைய பஞ்சாப் மாநிலத்தில் உள்ள, சியால்கோட் மாவட்டத்தில் "சேய்க்குவான்" என்ற சிறு கிராமத்தில் 1896 ஆம் வருடம், பிப்ரவரி மாதம் 14 ந்தேதி சுவாமிகள் மானுட குலத்திற்கு நன்மை புரியவேண்டி அவதரித்தார்.

ஸ்ரீ பிண்டிதாஸ் ஸ்ரீ பிரேம் கௌர் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக பிறந்த சாதுவிற்கு பெற்றோர் இட்ட பெயர், ஸ்ரீ சுந்தரதாஸ்.

இவரின் தந்தையாரின் பரம் பரைத் தொழில் புரோஹிதமும், யுனானி வைத்தியமும்தான். தந்தையார் சாதுவின் இளம் வயதி லேயே இறைவனடி சேர்ந்தார். எனவே அன்னையார் குடும்ப பொறுப்பினையும், குலத்தொழிலான வைத்தியத்தையும் மேற்கொண்டு குடும்பத்தை நிர்வகித்து வந்தார்.

அன்னை மிகவும் ஆச்சார சீலர், தெய்வ பக்தி மிக்கவர், பக்தி சங்கீத ஞானம் அறிந்தவர்,சாதுக்களை உபசரித்து மகிழ்பவர், அளவற்ற பொறுமையும், அன்பும் உடையவர். இவருடைய வழிநடத்துதலில் சாதுவின் இளமைக்காலம் சிரமத்துடன் கழிந்தாலும், நேர்மையான தூய வாழ்வாக அமைந்தது.

ஸ்ரீ இராமசாது அவர்கள் தனது பள்ளிப்படிப்பை 9 வது வகுப்புடன் முடித்துக் கொண்டு, ஆங்கிலேய



ராணுவத்தில் ஒரு குமாஸ்தாவாக மாதம் ரூ.75 ஊதியத்தில் பணியில் சேர்ந்தார்.அந்தப் பணியில் சுவாமிகள் 18 மாதங்கள் இருந்தார்.

அக்காலகட்டத்தில் அவரது மனதில் சுதந்திரப்போராட்டம் பற்றிய எண்ணம் வலுவடைந்தது. லா.லா. லஜபதிராய், வீர சவர்க்கார், போன்ற தேச பக்தர்களின் உணர்ச்சி மிக்க சொற் பொழிவுகளைக் கேட்டுப் பரவச மாகி தமது 22 வது வயதில் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்.

திரு. சத்யபால் தலைமையில் போராட்டங்களில் கலந்து கொண்டு



பல தடவை, மாதக்கணக்கில் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார். ஜாலியன் வாலாபாக் படுகொலையை நேரில் கண்டிருக்கிறார்.

இக்காலகட்டத்தில் அவரது மூத்த சகோதரர் திரு. காளிதாஸ் அவர்கள் சந்நியாசியாகி வீட்டை விட்டு புறப்பட்டுவிட்டார்.

இராமசாது அவர்கள் மிகச்சிறந்த நாடக நடிகர் ஆவார். உணர்வோடு இனிமையாக பாடி நடிக்கக்கூடியவர். இராமாயண நாடகத்தில் ஹனுமனாகவும், மகாபாரத நாடகத்தில் விதுரராகவும், சிவலீலா நாடகத்தில் சிவனாகவும் நடிப்பார். நடிக்கும்போது பக்தி வசப்பட்டு பரவச நிலையினை அடைவார். அவரது தாயாரைப் போலவே, சுவாமிகளும் சாதுக்களுக்கு பணிவிடைகள் செய்வதில் அலாதி விருப்பம் கொண்டவர்.

அவரது 24 வயதில் ஸ்ரீமதி அமிர்கௌர் எனகின்ற குணவதியை மணந்தார். அவர்களுக்கு கௌசல்யா என்ற பெண் மகவு வாய்த்தது. சுவாமிகளின் இளைய சகோதரர் திரு. இந்தர்தாசும் தனது இரண்டு பெண்குழந்தைகளை விட்டுவிட்டு சன்னியாசியாகிப் போய் விட்டார்.

சுவாமிகளே அப்பெண்குழந்தைகளையும் தன் குழந்தைகளைப் போலவே வளர்த்து ஆளாக்கினார்.

சில காலம் கடந்தது. ஞானத்தை அடையப் பிறந்தவர்களால் இவ்வுலக இன்பத்தில் நீண்ட காலம் நிலைத்திருக்க இயலாது அல்லவா? சுவாமிகளில் உள்ளத்தில் மூண்டிருந்த வைரக்கியம் என்ற தீ அவரை குடும்ப வாழ்வை விட்டு வெளியேறச் செய்தது.

ஆயினும் வெளியில் இருந்தே தன் குடும்பத்திற்கு தேவையானவற்றை நிறைவுடன் செய்து வந்தார். தனது துணைவியாரையும் ஆதரவின்றி தவிக்க விடவில்லை.

இளமையில் சுவாமிகள் "சாது அநமாநந்தா" என்பவரை தரிசிக்க நேர்ந்தது. அவரே சுவாமிகளுக்கு ஆன்மீக வாழ்வில் சிறந்த வழி காட்டியாய் இருந்து ஊக்கம் அளித்தார்.



சுவாமிகள் ஞான வேட்கையோடு பல புண்ணிய தலங்களை தரி சித்து வருகையில், பூரி செகன்நாதர் ஆலயத்தில் ஒரு சாதுவை தரிசித்தார். அவர்தான் பூஜ்ய ஸ்ரீ பரமானந்தர்.

சீடன் ஒருவன் " இவர்தான் நம் குரு" என்று தெரிந்து கொள்வதற்கோ, குரு ஒருவர் "இவன்தான் நம் சீடன்" என்று அறிந்து கொள்வதற்கோ பல வருடங்கள் பழக வேண்டியதில்லை. அவர்களது உள்ளுணர்வு உடனேயே காட்டி கொடுத்துவிடும். சுவாமிகளின் வாழ்க்கையிலும் அதுவே நடந்தது.

1929 ஆம் வருடம் தம் குருநாதரை பின் பற்றி ஸ்ரீ இராமசாதுவும் பூரியில் இருந்து கால் நடையாகவே தெற்குப் பகுதியை நோக்கி வந்தனர். வரும் வழி எல்லாம் ஸ்ரீ பரமானந்தர் தன் சீடனுக்கு பேருணர்வை அடையும் யோக சித்தி களை போதித்து வந்தார்.

யாத்திரையின் இடையே புண்ணிய நகரமாம் கும்ப கோணத்தை அடைந்த குருவும் சீடரும், சக்கரப்படித்துறை, ஆஞ் சநேயர் கோவில் மண்டபத்தில் சிறிது காலம் தங்கினார்கள். பிறகு ஸ்ரீ பரமானந்தர், சீடனை அங்கேயே தங்கியிருக்க கூறி விட்டு தான் மட்டும் இராமேஸ் வரம் யாத்திரைக்குச் சென்றார்.

சுவாமிகள், கும்பகோணம் சக்கரப்படித்துறை ஆஞ்சநேயர் கோவிலிலேயே தங்கி கடுமை யான தவமியற்றினார். அவர் எப்போதும் ராம நாமத்தை உச் சரித்துக் கொண்டே இருந்ததால், மக்கள் அவரை இராமசாது என்று அழைக்கலாயினர். இராமேஸ் வரத்தில் இருந்து திரும்பிய குருநாதர் ஸ்ரீ இராமசாது அவர்களை ஆசீர்வதித்து கும்பகோணத்திலேயே இருக்கக் கூறிவிட்டு தான் மட்டும் வடநாடு சென்று விட்டார்கள்.

அதன்பின்னர் ஸ்ரீ இராமசாது அவர்கள் கும்பகோணம் காவிரிக் கரையில் உள்ள கோழித்தோப்பு என்னும் தோட்டத்தில் தங்கினார். இங்கு ஸ்ரீ இராமாசாது உடலை வருத்தி பல நாட்கள் உணவு கூட உண்ணாமல்

கடும் தவத்தில் இருந்தார்.

ஒரு நாள் நள்ளிரவில் ஸ்ரீ இராமசாது அவர்களுக்கு இறையருள் சக்தி அன்னை பவானியின் வடிவில் காட்சி யளித்தது. உறங்கிக்கிடந்த பேருணர்வு எழுந்தது. பரமானந்தம் கொண்டார். இறைவியோடு பேசவும் செய்தார். பின்னர் இந்நிகழ்ச்சியை சுவாமிகள் ஆனந்த பரவசத்துடன் வர்ணிப்பதை அவரது பக்தர்கள் பலரும் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம்.

ஸ்ரீ இராமசாது அவர்கள் பெரும்பாலும் யாத்திரையிலேயே இருப்பார்கள். எங்கு சென்றாலும் கால்நடையாகவே யாத்திரையை மேற் கொள்வார். ஆங்காங்கே சுவாமிகளுக்கு தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற அன்பர்கள் பலருண்டு.

குண்டலினி யோகத்தில் இந்தியாவின் இமயம் என்று போற்றப்பட்ட ஸ்ரீ சிவானந்தா போன்ற தவச்சீலர்களுடன் தங்கி தவமியற்றியவர். ஸ்ரீ மகாத்மா காந்தி, நேரு போன்ற தேசத் தலைவர்களுடன் பழகிக் களித்தவர்,

ஸ்ரீ ஆனந்தகிரி சுவாமிகள், ஸ்ரீ ஓம்காரனந்தா சுவாமிகள், ஸ்ரீ யாழ்ப்பாணம் சுவாமிகள், ஸ்ரீ கொடுமுடி சுவாமிகள், திருவண்ணாமல் ஸ்ரீ குஞ்சு சுவாமிகள் போன்றோர் சுவாமிகளுடன் தங்கி குண்டலினி யோகத்தை கற்றுத் தேர்ந்தவர்கள் ஆவார்கள்.

இராமநாதபுரம் சாயல்குடி அருகே தங்கம்மாள்புரத்தில் சில காலம் தங்கியிருந்தார். கடைசியாக தனது 85 வது வயதின் போது "தவத்திரு அண்ணா" அவர்களின் பணிவுமிக்க வேண்டுகோளை ஏற்று கும்பகோணம் கீழக் கொட்டையூரில் தங்கியிக்க ஒப்புக் கொண்டார்கள்.

1980 ஆம் ஆண்டு ஸ்ரீ இராமசாது அவர்களின் அருளாசியினால் " ஸ்ரீ இராமார்ப்பணம் அறக்கட்டளை" நிறுவப்பட்டது. தவச்சாலைக்கு "சாதனா நிகேதனம்" என்று பெயரிடப் பட்டது.

ஸ்ரீ இராமசாது அவர்கள் துளசிதாச ரால் இந்தியில் எழுதப்பட்ட ஸ்ரீ ராமசரிதமாநஸ் என்னும் இராம காவியத்தை ஸ்ரீ சிவராமகிருஷ்ணன் அவர்களைக் கொண்டு தமிழாக்கம் செய்து நூல் வடிவில் வெளி யிட்டார்கள். ஆதி சங்கரரின் "யோக தாராவலீ" யின் தமிழாக்க மும் சுவாமி களால் வெளியிடப்பட்டது.

ஸ்ரீ இராமசாது அவர்கள் ஒரு ஞானி, சிறந்த யோகி, எல்லையற்ற இறைச்சக்தியை தம்முள் சதா உணர்ந்து கொண்டிருந்த பேரருளாளர். "இவ்வனுபவம் சாத்தியமா"? என்று ஐய்யப்படுபவர்களுக்கு, "ஆம் சாத்தியம் அதற்கு நானே சாட்சி" என்ற விதமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்

ஸ்ரீ இராமசாது அவர்கள் 1999 ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் நாள் மாலையில் தனது 104 வது வயதில் மகா சமாதி அடைந்தார்கள். எனினும் இன்றும் தோன்றாத் துணையாய் நின்று அனைவருக்கும் வழிகாட்டிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இக்கட்டுரையின் தொகுப்பாளராகிய அடியேனுக்கும் ஸ்ரீ இராமசாது அவர்களே தீட்சா குரு. அடியேன் 18 வயதில் இருந்து சுவாமிகளையும், தவத்திரு அண்ணா அவர்களையும், தரி சித்து வந்ததை மிகவும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

ஸ்ரீ இராமசாது அவர்களுடைய 128



வது ஜெயந்திவிழா சென்ற பிப்ரவரி 14 அன்று சாதனா நிகேதனத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. காலை 6 மணியில் இருந்து திருவருட்பா அகவல் பாராயணமும், அதைத்தொடர்ந்து சாதுவிற்கு அபிசேக ஆராதனைகளும், திரு. பாஸ்கர பாகவதரின் இசை சொற் பொழிவுகளும், தொடர்ந்து ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம மகா அர்ச்சனையும், மகா தீபாராதனையும், புஷ்பாஞ்சலி மற்றும் குருவந்தனமும் மிகச்சிறப்பாக நடந்தேறியது.

விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் காலை சிற்றுண்டியும், மதிய உணவும் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வழங் கப்பட்டன. விழா ஏற்பாடுகளை மிகச்சிறப்பாக செய்திருந்தமைக்கு நிர்வாகிகளுக்கு எங்களது மனப்பூர் வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

கும்பகோணம் செல்லும் பக்தர்கள் அவசியம் கும்ப கோணத்தில் இருந்து சுவாமிமலை செல்லும் வழியில் மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் கீழக் கொட்டையூர் சென்று ஸ்ரீ இராமசாது அவர்களை தரிசனம் செய்யத் தவறாதீர்கள்.

ஸ்ரீ இராமசாது அவர்களின் தியான மண்டபம் காவிரிக் கரையில் அமைதியான சூழ்நிலையில் அற்புதமாக அமைந் திருக்கிறது. எப்போதும் ஓர் ஆழ்ந்த அமைதியை தந்து கொண்டிருக்கும் தியான மண்ட பத்தில் நாம் சென்று அமர்ந்த சற்று நேரத்திலேயே மனம் ஆழ்ந்த அமைதியடைவதை நன்கு உணரலாம்

ஸ்ரீ இராமசாதுவின் சமாதி ஆலயமும், அருகிலேயே அமைந் திருக்கும் தவத்திரு அண்ணா அவர்களின் சமாதி ஆலயமும், நம்முடைய கர்ம வினைகளை அகற்றக்கூடிய வலிமை மிகுந்த அதிர்வலைகளை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை நன்கு உணரலாம்.

மகான்களின் ஆசிகளைப் பெற்று வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்கையை அர்த்தமுள் ளதாக்கிக் கொள்ளுங்கள். குரு வாழ்க! குருவே துணை!

முகவரி:

ஸ்ரீ இராம சாது தியான மண்ட பம், சாதனா நிகேதனம்,
கீழக் கொட்டையூர்,
கும்பகோணம் – 612002.

ஆமை!

துவாரகாமாயியின் முன் முற்றத்தில் நடுப்பகுதியில் ஒரு வெள்ளைப் பளிங்காலான ஆமை உருவம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இந்த ஆமை உருவத்திற்கு பல அர்த்தங்கள் கூறப்படுகின்றன. இது மகாவிஷ்ணுவின் கூர்ம அவதாரத்தை நினைவுபடுத்துகிறது.

ஆமையைப்போல் தலையை கீழே சாய்த்துக் கொண்டுதான் வழிபடும் இடங்களில் உள்ளே செல்ல வேண்டும். இந்த ஆமை பாபாவை பார்த்த வண்ணம் இருக்கிறது.

இதை நாம் ஒரு உதாரணமாக எடுத்துக் கொண்டு பாபாவையே நாம் உற்று நோக்கிக் கொண்டு இருந்தோமேயானால் அவரும் நம்மையே உற்று நோக்கி நமக்கு நல்வாழ்வு அளிப்பார். என்பதையே



ஆமையின் வடிவம் நமக்கு உணர்த்துகிறது.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

ஸ்ரீ சாய் ராதாகிருஷ்ணமாயி குரு சேவா அறக்கட்டளை



"அதி தேவதை" ஸ்ரீ இராதா கிருஷ்ண மாயி புத்தகத்தின் ஆசிரியரும், கூத்தனூர் ஸ்ரீ சிவசித்தர் சீரடி சாய் பாபா ஆல யத்தின் அர்ச்சகருமான திரு.சாய் சரவணன் அவர்கள், பகவான் சாயி நாதரின் பரம பக்தையும், செகத்மாதாவும், சீரடியில் அன்னபூரணியாக விளங்கிய ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி அன்னையின் திருநாமத்தில், பாபாவின் அருள் ஆசியோடு ஸ்ரீ சாய் ராதாகிருஷ்ண மாயி குருசேவா அறக்கட்டளை. என்ற அமைப்பை தொடங்கி யிருக்கின்றார்.





அன்பு நண்பர், "அம்மையின் மைந்தன்" திரு.சரவணன் சாய் அவர்களின் சிந்தையில் உதித்த இந்த அமைப்பின் மூலம் பல்வேறு சேவைகளையும், திட்டங்களையும், செயல்படுத்தும் நோக்கோடு ஆரம்பித் துள்ளார்.

அக்கட்டளையின் முதல் சேவையாக இறைவனின் குழந்தை களான, இல்லாதவர்களுக்கும், இயலாத வர்களுக்கும், உடல் குறைபாடுடைய வர்களுக்கும் அவர்கள் இருக்கும் இடம்தேடிச் சென்று அவர்களுக்கு அன்னம் வழங்கும் சேவையை தொடங்கியிருக்கிறார்கள்.

முதல் அன்னதானம் ஜனவரி 24.1.23 அப்பூதியடிகளார் திருநட் சத்திரத்தன்று பெங்களூர் திருமதி. லட்சுமி இரமணன் அம்மா அவர்களின் ஆசியோடு அவர்களின் இல்லத்தில் இருந்து துவங்கப்பட்டது.

தொடர்ந்து, கூத்தனூர் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் இருக்கும் ஆதரவற்றோருக்கு அன்னதானம் வழங்கும் சேவை தொடர்ந்து நடந்து வருகின்றது.

பகவான் சாயிநாதரின் பேரருளாலும், அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி அவர்களின் ஆசியினாலும் அறக்கட் டளை பல்வேறுவிதமான மானுட சேவையாற்றி மேன்மேலும் உயர "சாய் தியானாலயா" பிரார்த்தனை மையம் மனப்பூர்வமாக வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறது.



மாரடைப்பை தடுக்கும் அவரைக்காய்!

நமக்கு அவரைக்காயாகவும், முற்றிய பிறகு அவரை மொச்சையாகவும் கிடைக்கும் அவரைக்காயே பிரெஞ்சு பீன்ஸ் என்றும் வழங்கப்படுகிறது.



உடலுக்குக் குளிர்ச்சி தரும் காயாகவும், இழந்த பலத்தை மீட்டுப் புத்துணர்ச்சி தரும் மருந்தாகவும்,பித்த நோய்களைக் குணமாக்கும் மருந்தாகவும் அவரைக்காய் திகழ்கிறது என்கிறது ஆயுர் வேதம்.


அவரைக்காயில் புரதமும் வைட்டமின் 'ஏ', 'சி' ஆகியவையும் அதிக அளவில் உள்ளன. மேலும், புரதத்தைவிட மாவுச்சத்து மூன்று மடங்கு அதிகமாய் இருக்கிறது. 100 கிராம் அவரைக்காயில் கார்போ ஹைட்ரேட் 4.5% ஆகும். புரோட்டீன் 1.7 ஆகும்.

புதிதாகப் பறித்த அவரைக்காயில் க்ரோட்டின் சத்து அதிக அளவு இருக்கிறது.எனவே கண்பார்வை அதிகரிக்கவும், பார்வை மங்குவதைத் தடுக்கவும் அவரைக்காயைச் சமைத்து உண்பது மிகச்சிறந்தது.

மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம், மலச்சிக்கல் ஆகியன ஏற்படாமல் தடுக்க அவரைக்காயில் உள்ள லெசித்தின் என்னும் நார்ப் பொருள் பயன்படுகிறது. அவரைக் காய் கொழுப்புப் பொருள்கள் இரத்தக் குழாய்களை அடைத்து விடாமல் தடுக்கிறது. அவரை விதையை நீரிழிவு மற்றும் இதய நோய்காரர்களும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களும் சிறிதளவாவது சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.

அவரைகாய் இன்சுலினை உற்பத்தி செய்து கொண்டே இருப்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு இது நன்மை செய்யும் காயாகிறது. இளவயதுக் காரர்களும், விளையாட்டு வீரர்களும் அவரைக்காய்ப் பொரியலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உடல் வளர்ச்சிக்கு இக்காய் மிகவும் பயன்படுகிறது.

100 கிராம் அவரைக்காயில் ஈரப்பதம் 82 சதவிகிதந்தான் உள்ளது. இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ், நியாசின் போன்றவையும் இதில் இருப்பதால் நரம்புக் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி ஏற்படாமல் தடுக்கிறது.



இரத்த சோகை, மூச்சுவிடுவதில் சிரமம், பசியின்மை முதலியவற்றை இதில் உள்ள வைட்டமின் 'பி'யும், மூட்டுவலி, அதிகக் களைப்பு முதலியவற்றை இதில் உள்ள வைட்டமின் 'சி'யும் போக்குகின்றன.

புரதச்சத்தும் கார்போஹைடிரேட்டும் முறையே உடல் வளர்ச்சிக்கும், உடலுக்குத் தேவையான சக்தியையும் வழங்குபவை. இவை இரண்டும் அவரைக்காயில் அதிகமாய் இருப் பதால் அடிக்கடி பசி எடுத்துச் சாப்பிடும் குழந்தைகளுக்கும், நீரிழிவு நோயாளிகளுக்கும், உடல் ஆரோக்கியத்தில் அக்கறை உள்ள வர்களுக்கம் அவரைக்காய் அரிய சத்துணவாகவும் திகழ்கிறது.

முற்றாத அவரைப் பிஞ்சுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சாறு உடலுக்கு ஊட்டம் தரும் சத்துணவுப் பானம் ஆகும். உடல் பருமனைக் குறைக்க விரும்புகிறவர்களுக்கு இது ஓர் அரிய உணவு மருந்தாகும்.

ஆண்மை விருத்திக்கும் அவரைக்காய் சிறந்த உணவாகும். இருபாலார்களின் மலட்டுத் தன்மையை அவரைக்காய் நீக்கும். எல்லா வயதுக்காரர்களுக்கும் குறிப்பாக வயதா னவர்களுக்கு எளிதில் செரிமானமாகும் சத்துமிகுந்த அருமையான காய்கறி இதுவாகும்.

மூட்டு வலியைக் குணமாக்க இருநூறுகிராம் அவரைப் பிஞ்சுகளை நன்றாக அரைக்கவும். பிறகு, அவற்றுடன் மண் சட்டியில் தலா ஒரு தேக்கரண்டி மிளகுத்தூளும், சுக்குத்தூளும் கலந்து, மூன்று டம்ளர் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து இறக்கவும். இளஞ்சூட்டில் வலியுள்ள இடங்களில் இந்தப் பசையை எடுத்துப் பற்று இட வேண்டும். மூன்று நாட்களில் கால்கைகளில் உள்ள மூட்டு வலிகள் குணமாகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுவலி நீங்க இளம் பிஞ்சுகளை நன்கு அரைத்து, அதை விளக்கெண்ணெயில் குழைத்து, தொப்புளைச் சுற்றிப் பற்றுப் போடவும். வயிற்றுவலி உடனே குணமாகும்.

எப்போது சமைத்தாலும் அவரைப் பிஞ்சுகளையே சமைக்க வேண்டும். முற்றிய அவரைக்காய்களுக்கு மருத்துவக் குணங்கள் மிகவும் குறைவு. வாயுத் தொந்தரவையும், வாய் நாற்றத்தையும் போக்கும் காய்கறிகளுள் அவரைக்காயும் ஒன்றாகும்.

இனி அவரைக்காய்களை எங்கு கண்டாலும் உடனே வாங்கி சமைத்து சாப்பிட்டு ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

சேவா ரத்தினம்!

பகவான் சாயிநாதர் உடலுடன் வாழ்ந்த காலத்தில் இறைச் சேவையை விட மானுட சேவையையே அதிகம் செய்தார் என்பதை சாயி சத்சரிதத்தை நன்கு படித்து உணர்ந்தவர்கள் அறிந்து கொள்வர்.

சென்னை விருகம்பாக்கம் திரு. கோபால் சாய்ராம் அவர்கள் தனது 81 வது வயது வரை சிறப்பான சாயி சேவை செய்தவர் என்பதை அவரை அறிந்தவர்கள் நன்கு அறிவர்.

பகவான் சாயி அவரது தள்ளாத வயதை கருத்தில் கொண்டோ எண் ணவோ, அவருக்கு சாயி சேவையில் இருந்து ஓய்வு கொடுக்க வேண்டி, வயது முதிர்வின் காரணமாக அவரது உடல் நிலையில் சற்றே தொய்வை ஏற்படுத்தி அவரை ஓய்வு பெறச் செய்திருக்கின்றார்.

திரு.கோபால் சாய்ராம் அவர்கள் கடுமையான உழைப்பாளி தனது தள்ளாத வயதிலும் பிறருக்கு பாரமாக இருக்க விரும்பாதவர். தனது 80 வது வயதுவரை பிறரை எதிர்பாராது உழைத்து வாழ்ந்தவர். அந்நிலையிலும் தன்னால் இயன்ற சாயி சேவையை மனநிறைவோடு செய்தவர்.

சாயி ஆலயங்கள் மட்டுமல்லாது பல ஆலயங்களிலும் அவர் தனது சேவையை செய்திருக்கின்றார். இன்றும்கூட தன் உடல் நலத்தைப் பொருட்படுத்தாது சாயி சேவை யாற்றுவதில் முனைப்போடு செயல் படுகின்றார். பல நல்ல இதயங் களை சேர்த்து வைத்திருக்கும் அவர் சொத்துக்களை சேர்க்கவில்லை.

இயற்கையின் விதியே அதுதான். அதற்கு இவர்மட்டும் விதிவிலக்கா என்ன?

திரு. கோபால் சாய்ராம் அவர்கள் ஒரு நாள் என்னை தொலைபேசியில் அழைத்து,



சாய்ராம் இம்மாதத்துடன் என்று வருட சந்தா முடிகின்றது. இனிமேல் எனக்கு புத்தகம் அனுப்ப வேண்டாம் என்றார். இதை என்னிடம் கூறும்போது அவரது உள்ளம் உடைந்து குரல் தழுதழுத்தது.

நான் ஏன் சாய்ராம்? என்றேன்.

அவரோ ஒன்றுமில்லை சாய்ராம். எனக்கு உடல்நலமில்லை. எனது இரண்டு மூட்டுக்களும் தேய்ந்து விட்டது. வயதாகிவிட்டதால் அறுவை சிகிச்சை பயன்படாது.

ஆகையால் இப்படியே பத்திரமாக இருந்து கொள் ளுங்கள் என்று கூறி விட்டார்கள். இப்போது வீட்டிலேயேதான் இருகி றேன். இனி வேலைக்குச் செல்ல முடியாது. வருமானத்திற்கும் வழியில்லை அதனால்தான் என்றார் வருத்தத்துடன்.

தமிழ்நாடு முழுவதும் நமது இதழ் கூடுமான வரை இலவசமாகத்தான் செல்கிறது. ஆனால் புத்தகம் நடத்துவ தில்

இருக்கும் சிக்கல்களையும், பொருளாதார நெருக்கடிகளையும் உணர்ந்த 81 வயது முதியவர் இனிமேல் பணம் கட்டமுடியாது என்பதால் புத்தகம் அனுப்ப வேண்டாம் என்று தழுதழுத்த குரலில் கூறியது என் மனதிற்கு சங்கடமாக இருந்தது.

சாய்ராம், நாம் சாயி இதழை பணம் சம்பாதிப்பதற்காக நடத்தவில்லை. நீங்கள் கவலைப்படவேண்டாம். இன்றிலிருந்து நீங்கள் நமது இதழுக்கு ஆயுள் சந்தாதாரர் ஆகி விட்டீர்கள். பகவான் சாயிபாபா இந்த இதழை நடத்துகிற வரை உங்களுக்கு தொடர்ந்து இதழ் வந்து சேரும் என்று கூறிவிட்டு, வருமானத்திற்கு என்ன செய்கின்றீர்கள் சாய்ராம் என்று கேட்டேன்.

சாய் மெய்யடிமை அய்யாவும், கலியன் சாய்ராம் அவர்களும் மாதா மாதம் அவர்களால் முடிந்த அளவு உதவுகின்றார்கள் சாய்ராம். அதை வைத்து காலத்தை ஓட்டுகின்றேன் என்றார்.

ஐந்து கோடி, முப்பது கோடி என்று கடன்வாங்கி பாபாவிற்கு ஆலயம் எழுப்பி வரவு செலவு பார்ப்பதைவிட கையில் இருக்கும் சொற்ப பணத்தை இது போன்று தன்நலம் கருதாமல் தன் ஆயுள் முழுவதும் சாயி சேவை செய்து இறுதியில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் சேவாரத்தினங் களுக்கு உதவுவதே பகவான் சாயிபாபா விற்கு செய்யும் உண்மையான சேவையாக இருக்கும்.

இச்சேவையை நமது இதழ், பகவான் சாயிநாதரின் ஆசியோடு எதிர்காலத்தில் செய்ய வேண்டும் என்ற லட்சியத்தை மனதிற்கொண்டு அதற்கு முதல் படியாக திரு. கோபால் சாய்ராம் அவர்களுக்கு நமது " சாயி மகராஜ் குருவை தேடி" இதழ் மூலம் எம்மால் இயன்ற பொருளுதவியையும், நமது இதழுக்குண்டான ஆயுள் சந்தாவினையும், அன்டையும், ஆறுதலையும், நேரில் சென்று வழங்கிவந்தோம்.



நான் தங்களை காண வருகிறேன் என்று கூறியதும் இம்மாதிரியான சூழ லிலும் நம்மை எதிர்பார்த்து வீட்டின் வாசலிலேயே காத்திருந்து வரவேற்று எமக்கு பொன்னாடை போர்த்தி சாயிநா தரின் உதியை வழங்கி பாபாவின் பெரிய புகைப்படம் ஒன்றையும் வழங்கி வாழ்த்தி வழியனுப்பிவைத்தார். அவரின் இறைத்தன்மைக்கு யாம் தலை வணங்குகிறோம்.

"பகவான் சாயி பூட்டிய ஆலயங்களில் இருப்பார் என்பதை யாம் ஒரு போதும் நம்புவதில்லை" இதைப் படிக்க நேரும் உங்களுக்கும் இக்கருத்தில் உடன்பாடு இருந்து, அவருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமிருந்தால் அவரது தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரிடையாக அவரிடமே உதவலாம்.

தொலைபேசி எண்: 9962763311.
முகவரி: திரு.கோபால் சாய்ராம்.
32/23, முதல் குறுக்குத் தெரு,
இந்திரா நகர்,
விருகம்பாக்கம், சென்னை 92

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் ஜீவசமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் ஸ்ரீமத் நடேசன் சுவாமிகள் மற்றும் ஸ்ரீ மத் ஞான மாணிக்கம் சிவாச்சாரியார் என்று இரண்டு மகான்களின் சீவ சமாதியை தரிசிப்போம் வாருங்கள்.

ஸ்ரீமத் நடேசன் சுவாமிகள், ஸ்ரீமத் ஞான மாணிக்கம் சிவாச்சாரியார்!

ஸ்ரீமத் நடேசன் சுவாமிகள் திருவண்ணாமலை மாவட்டம் சேரந்தாங்கல் என்ற ஊரில் 1889 ஆம் வருடம் பிறந்தவர். தனது 13 வது வயதில் ஆன்மீக நாட்டம் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி வண்ணாரப் பேட்டை பகுதிக்கு வந்து கூலி வேலை செய்து வந்தார். பிறகு அண்ணா சாலையில் உள்ள ஜிம்கானா கிளப்பில் தோட்ட வேலை கிடைத்தது.



அக்காலத்தில் ஜிம்கானா கிளப் இருந்த தீவுத்திடல் பகுதி அடர்ந்த காட்டுப்பகுதியாக இருந்தது. சுவாமிகள் வேலை முடித்து திரும்பும் பொழுது, தற்போது தீவுத்திடலின் எதிரே இருக்கும் குதிரை சிலையை கடக்கும்போது ஓர் அதீத அதிர்வலையை உணர்ந்தார்.

அது என்னவென்று ஆராய்ந்த போது அருகே இருந்த ஒரு வேப்ப மரத்தின் அடியில் சுவாமி ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவரின் முன் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த காட்சியைக் கண்டவுடன் சுவாமிகளுக்கு மனதிற்குள் ஓர் ஆழ்ந்த அமைதி

கிடைத்தது. அதனால் தினந்தோறும் வேலை முடிந்ததும் அவரை தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. மறுநாள் அவரைத் தேடி வந்ததும், அந்த சுவாமிகள் கண்களைத்திறந்து பார்த்து சிரித்தார்.

மூன்றாம் நாள் இன்று எப்படியும் சுவாமியிடம் ஆசி வாங்கிவிட வேண்டும் என்று ஆசைப்பட்டு சென்றார். ஆனால் அங்கு சுவாமிகள் இல்லை. ஆனால் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. நடேசன் சுவாமிகள் விளக்கை வணங்கிவிட்டு திரும்பினார்.

அதற்குப்பின் தொடர்ந்து பல நாட்கள் சுவாமிகளை தேடிப்பார்த்தார். சுவாமிகளை காண முடியவில்லை. ஆனால் தினந்தோறும் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். அதையே வணங்க ஆரம்பித்தார். அவ்வொழியே சுவாமிகளுக்கு ஞான ஒளியை வழகிற்று.



சுவாமிகளுக்கு திருமண வயது வந்த உடன் அவரது பெற்றோர்கள் சுவாமிகளை வற்புறுத்தி கோவூர் குன்றத்தூரைச் சேர்ந்த ராஜம்மா என்ற பெண்மணியை திருமணம் செய்து வைத்தனர். இல்லறத்தின் பயனாக சுவாமிகளுக்கு, 4 மகன்களும் 1 மகளும் வாரிசாக கிடைத்தனர். அனைவருக்கும் திருமணம் செய்து வைத்து தன் கடமையை முடித்தார்.

காலம் செல்ல, செல்ல, சுவாமிகளுக்கு ஆன்மீக நாட்டம் அதிகரிக்கவே, தனக்கு ஒளி கிடைத்த வேப்ப மரத்தடியே கதி என வாழ்ந்து வந்தார். ஒருநாள் இறை, சக்தி வடிவில் அவரை ஆட்கொள்ள, தன்னை அட்கொண்ட சக்திக்கு சிலை வடித்து, ஸ்ரீ வீரகாளியம்மன் என்று பெயரிட்டு சிலையை பிரதிட்டை செய்து மக்களுக்கு ஆன்மீக சேவை செய்து வந்தார்.

சுதந்திரத்திற்குப் பிறகு இப்பகுதி இராணுவப் பகுதியாக மாற்றப்பட்டது. எனவே கோவிலை அகற்ற உத்தரவிடப் பட்டது. சுவாமிகள் அந்த இடத்தின் பேராற் றலை எடுத்துக் கூறியும், இராணுவ அதிகாரிகள் கேட்கவில்லை.

கோவிலை இடிப்பதற்கு முதல் நாள் இரவு இராணுவ உயர் அதிகாரியின் கனவில் தோன்றிய வீர கன்னியம்மன் தன்னுடைய இருப்பை எடுத்துக்கூறி தனது சித்து விளையாட்டைக் காட்ட, மறுநாள் இராணுவ அதிகாரி, கோவிலை இடிக்காமல் சுற்றுச் சுவர் கட்ட ஆணையிட்டார்.

சுவாமிகள் 1990 ஆம் ஆண்டு தனது 101 வயதில் சமாதியடைந்தார். கோவில் வளாகத்திலேயே சுவாமிகளுக்கு சமாதி பீடம் அமைக்கப்பட்டது. சுவாமிக லில் சமாதிக் கருகிலேயே, அவரது மனைவி ராஜம்மாவின் சமாதியும் அமைந்தி ருக்கின்றது.

வருடம்தோறும் நவம்பர் 7 ம்தேதி சுவாமிகளின் வாரிசுகளால் மிகச்சிறப்பாக குருபூஜை நடத்தப்படுகிறது.

ஜீவபீட ஆலய முகவரி:

ஸ்ரீ வீர கன்னியம்மன் ஆலயம்,
ஸ்ரீமத் நடேசன் சுவாமிகள் சீவ பீடம்,
அண்ணாசாலை, சென்னை 2.
(சென்னை தீவுத்திடல் அருகே இராணுவ கேண்டீன் எதிரே உள்ள குதிரை சிலைக்கு அருகில் உள்ளது)


ஸ்ரீ ஞான மாணிக்கசிவாச்சாரியார் சித்தர் ஜீவபீடம்

ஸ்ரீமத் ஞான மாணிக்கம் சிவாச்சாரியார்

ஸ்ரீமத் ஞான மாணிக்கம் சிவாச்சாரியார் 200 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் வசித்த சித்தர். வட சென்னையில் சீவ பீடம் கொண்டுள்ள ஸ்ரீ குணங்குடி மஸ்தான்,

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளுக்கு சமகாலத்தில் வாழ்ந்த மகான். மூவரும் ஒன்றாக இருந்தார்கள் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. ஆரம்பத் தில் பூஜைகள் நடைபெற்று வந்த ஆலயம் காலப்போக்கில் கவனிப்பாறின்றி புல்பூண்டுகள் முளைத்து மூடிப்போனது.

காலப்போக்கில் சமாதியைச் சுற்றி கடைகள் கட்டி வியாபாரம் செய்து வந்தனர். ஆனால் எந்த வியாபாரம் அங்கு பெருகவில்லை.

மாறாக பெருத்த நஷ்டமே ஏற்பட் டதால், அப்பகுதியின் உரிமையாளர் தேவ பிரசன்னம் பார்த்தபோது, அங்கு ஸ்ரீ ஞான மாணிக்கம் சிவாச்சாரியார் என்ற சித்தரின் சீவ பீடம் மறைந்து கிடக்கின்றது என்று தெரிந்து கொண்டு அப்பகுதியை சுத்தம் செய்து பார்த்தனர்.

தேவபிரசன்னத்தில் கூறியது போல லிங்கம் நந்தியோடு கூடிய சமாதி பீடத்தை கண்டுபிடித்து புனர் நிர்மானம் செய்து குடமுழுக்கு நடத்தி வைத்தனர் காலம் பல கடந்து விட்டதனால் சித்தரின் பூர்வீக கதைகளை அறிய முடியவில்லை.

ஆரம்பத்தில சீவ பீடம் ருத்ர சோமநாதர் என்ற பெயருடன் வழி பாட்டில் இருந்திருக்கிறது. இன்றும் அதே பெயருடன் வழிபடப்படுகிறது.

சுவாமிகள் வராகி வழிபாட்டில் இருந்ததனால், இவ்வாலயத்தில் வராகி வழிபாடு செய்து சித்தரை மனதார வழிபட்டால் எதிரிகளின் தொல்லைகளில் இருந்து விலகி



அமைதியான வாழ்வை பெற முடியும் என்ற நம்பிக்கை பக்தர்களிடையே உள்ளது.

சித்தர்களின் சீவபீடத்தை தொழுவோம்!

சீரான வாழ்க்கையை சிக்கலின்றிப் பெறுவோம்!

<u>ஜீவபீட ஆலய முகவரி:</u>

ஸ்ரீ ருத்ர சோமநாதர் ஆலயம்,

ஸ்ரீமத் ஞான மாணிக்கம் சிவாச்சாரியார் சீவ பீடம்,

மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை.

(பாரி முனையில் இருந்து இராயபுரம் செல்லும் சாலையில் வலது புறம் ரோட்டின் ஓரத்தில் சீவபீடம் உள்ளது)

- (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.சுனில் குடும்பத்தார்.USA.ரூ.3000.
திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
டாக்டர்.T.பிரபா.அனகாபுத்தூர். ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி.ஸ்ரீ மாதா வல்லபானந்தமயி. மேல்சிறுணை.ரூ.1000.
திரு.சுந்தரேசன். இராமார்ப்பணம் டிரஸ்ட். கொட்டையூர்.ரூ.1000.
திரு.ராஜேஸ்வரி செகன்நாத். மதுரை. ரூ.1000
திரு.இராஜசேகர் குடும்பத்தார். குரோம்பேட்டை.ரூ.1500.
திருமதி.யோகானந்தம் மகேஸ்வரன். மதுரை. ரூ.1000.

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800.
திரு.முரளிசாய்ராம். திருநின்றவூர். ரூ.500
திருமதி.ஹேமலதா வைத்தியநாதன். சென்னை.ரூ.500.
திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500
திரு. செல்வநாயகம் ஜெயந்தி மணலி.ரூ.500.
திருமதி.பானுமதிபாண்டி. மதுரை. ரூ.500.
திருமதி. வாழ்க வளமுடன் சுமதி.கொளத்தூர்.ரூ.500.
திருமதி.ரமா. திண்டுக்கல்.ரூ.500.
திருமதி.முருகேஸ்வரி.திண்டுக்கல். ரூ.500.
திரு.பொன்முருகன் குடும்பத்தார். மதுரை. ரூ.500.
திருமதி. இந்துமதி.அயனாவரம்.ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500
திரு. கேஸ்வர். ஈரோடு. ரூ.500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.300.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திருமதி.எஸ்.ரங்கநாயகி.நாகை.ரூ.200.
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.L.I.C ஏஜெண்ட். கொளத்தூர்.ரூ.200.
திரு.சதீஷ்குமார். பட்டாளம். ரூ.101
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
திருமதி.பத்மா. AYK. ரூ.100.
திருமதி.உமா முருகன். சின்னாளப்பட்டி. ரூ.100
சிவா அரிசி கடை. பெரியார் நகர்.ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
திருநீர்மலை.அரிசி 25 கி.
திருமதி.ஜெயந்தி குமாரசாமி,
சென்னை -57 ரூ.150.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

டாக்டர்.ஜி.பிரபா.அனகாபுத்தூர். ரூ.1000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.500.
திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.
திருமதி.திலகம்.குரோம்பேட்டை.ரூ.300.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.200
திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர்.ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்


அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068